THE MADRAS LEGISLATIVE COUNCIL

Monday, the 9th August 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

New Well Subsidy Scheme.

a * 62. Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of applications received in 1962 under New Well Subsidy Scheme from the ryots in Gingee Taluk, South Arcot District, as per G.O. Ms. No. 3552, Food and Agriculture, dated 24th October 1958; and

(*b*) the number of applicants who were given subsidy ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Sixty-three applications were received during 1962–63 under New Well Subsidy Scheme. Out of these sixty-three applications, first instalment of loan was sanctioned in twenty-eight cases and the remaining thirty-five cases were rejected.

(அ) புதிய கிணறுகள் உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் 1962–63-ல் அறுபத்து மூன்று விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்த அறுபத்து மூன்று விண்ணப்பங்களில், இருபத்து எட்டு விண்ணப்பங்களில் கடனின் முதல் தவணை வழங்கப்பட்டது. எஞ்சிய முப்பத்தைந்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

(*b*) Out of the twenty-eight cases in which first instalment was sanctioned, thirteen wells were completed and subsidy adjusted. In one case, the well has since been completed and the subsidy is pending adjustment. In nine cases, summary recovery was ordered as the wells were not completed by the grantees. The remaining five wells have yet to be inspected.

(இ) முதல் தவணை வழங்கப்பட்ட இருபத்து எட்டு விண்ணப்பங்களில், பதின்மூன்று கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டு அவற்றிற்கான உதவித்தொகை சரிக்கட்டப்பட்டது. ஒரு விண்ணப்பத்தில் கிணறு வெட்டும் வேலை இப்போது முடிக்கப்பட்டு விட்டது. உதவித் தொகை இன்னும் சரிக்கட்டப்படவில்லை. ஒன்பது விஷயங்களில் கடன் உதவி பெற்றவர்கள் கிணறு வெட்டும் வேலையை முடிக்காததனால், வழங்கப்பட்ட கடன் தொகையை மொத்தமாக வசூல் செய்யுமாறு ஆணையிடப்பட்டது. எஞ்சிய ஐந்து கிணறுகள் பார்வையிடப்படவேண்டிய நிலையில் உள்ளன.

---

a Question postponed from the list of Questions for 6th August 1965.

[9th August 1965

திரு. எஸ். கே. சம்பந்தன் : நிராகரிக்கப்பட்ட 35 அப்ளி-கேஷன்கள் எந்தக் காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : Applications withdrawn by the applicants are 15. The number of applications not sufficiently solvent and *bona fide*, is 20.

MR. CHAIRMAN : As the hon. Member Sri N. R. Thiagarajan is not present, Questions 63 and 64 and the answers thereto will be printed in the Official Report of the proceedings.

Dam in Anaikaraipatti

a * 63 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to provide irrigation facilities to the old ayacutdars by repairing the breached dam in Anaikaraipatti, near Kandamanaickanur, Periakulam taluk, Madurai district;

(*b*) if so, the estimated cost of the above scheme; and

(*c*) when will it be implemented?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There is no such proposal.

(*b*) and (*c*) Do not arise.

Distribution of insecticides, sprayers, etc., to agriculturists

a * 64 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to distribute the insecticides, sprayers, etc., to the agriculturists through the Agricultural Co-operative Banks ?

THE HON. SRI P. KAKKAN : There is no proposal for distribution of either pesticides or sprayers through Agricultural Co-operative Banks. The Government have, however, permitted only pesticides of less poisonous nature to be distributed by Co-operatives which have godown facilities. The sale of sprayers and dusters at concessional rates to the co-operatives (as in the case of individual ryots) has been allowed with the object of enabling the co-operatives to own and hire the equipment to needy ryots in the area.

Free Education Policy.

* 81 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state the number of management high school teachers in the State whose pay has been reduced on account of the recent Free Education Policy and in how many cases, the pay has been restored so far ?

a Question postponed from the list of Questions for 6th August 1965.

9th August 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In no case has the pay of teachers, employed in aided secondary schools under private managements, been reduced, on account of the Free Education Policy.

DR. H. V. HANDE : Is it a fact that about a year ago the Hon. the Chief Minister made a statement in Ootacamund that, whatever be the cases, if they were brought to the notice of the Director of Public Instruction, the deficiency in salary would be made good ? I tabled this question nearly 14 months ago. It is answered now only. Every time the Legislature session was prorogued, I was renewing this question again and again.

MR. CHAIRMAN : The hon. Member will please put the question straightway and not make a speech.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer is very clear, perfect, complete and unequivocal, and if the hon. Member had any information about the grievances of teachers, when he gave notice of the question, he would now see from the answer that they have been removed.

SRI G. KRISHNAMOORTHY : While the Government decided that no teacher should be affected on account of the free education policy, did they communicate this to the departmental authorities, Sir.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Government initially did not take any decision like that. But when certain representations were made by the managements as well as teachers, Government have taken this decision that teachers drawing salaries on particular scales should on no account be affected by this policy.

SRI G. KRISHNAMOORTHY : Are the Government aware that the department has not implemented this policy fully so much so that the increments due to teachers are being absorbed in salaries, and this amounts to a cut in the original salary?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member will remember—I do remember—the same point was raised by him in a non-official resolution, and we had a thorough discussion. My answer then was that the salaries drawn would not be reduced. It does not refer to increments. The hon. Member now raises a quite different issue about the increments. Now, under the decision taken by the Government, increments must be absorbed in the salaries.

DR. H. V. HANDE : Has the deficiency been made good with retrospective effect, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of retrospective effect arising here. Those who have been drawing a particular salary in a particular scale would not be affected. If I say they would not be affected, it means they would not be affected.

SRI G. KRISHNAMOORTHY: Does not the absorption of increment in the salary amount to this, namely, the free education policy is still affecting the salaries of teachers ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is a question of interpretation and comment.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அவர்களுடைய இன்றைய ஊதிய நிலை அப்படியே இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிற காரணத்தால், பின்னாட்களில் பெறவேண்டிய அதிக ஊதிய உயர்வு என்பதை அரசாங்கம் இந்த ஊதிய உயர்வை முன்கூட்டியே ஏற்றுக்கொண்ட காரணத்தால் பின்னால் தர முடியாத நிலையில் இருக்கிறது என்பது உண்மையா ? இந்த ஊதிய உயர்வு தடுக்கப்படுமானால் அவர்கள் பெறக்கூடிய பயன்கள் கிடைக்காமல் போய்விடுமல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதை கனம் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தீர்மானமாகக் கொண்டுவந்து அதைப் பற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது அரசாங்கத்தின் நிலை விளக்கப்பட்டது. அவர்கள் வாங்குகிற சம்பளம் குறைக்கப்படமாட்டாது என்பது அரசாங்கத்தின் முடிவு. அதைத்தான் நான் சொன்னேன்.

Schemes executed under the Third Five-Year Plan

* 82 Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the schemes executed so far during the Third Five-Year Plan that were not originally included in the Third Five-Year Plan ; and

(b) the amount spent on each of these schemes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) A 'paper'* containing the answer is placed on the table of the house.

SRI S. K. SAMBANDHAN: Sir, in the statement placed on the table of the House, the Hon. Minister has stated that "Significant part of this increase is due to the implementation of new schemes not originally contemplated". So, may I know from the Hon. the Chief Minister, Sir, how many schemes that were originally contemplated in the Third Five-Year Plan, have been left out ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is not a question of leaving out any schemes. I do not know exactly whether any schemes have been left out. But the allotment for particular schemes provided for in the plan could not have been spent. So in lieu of that new and useful schemes that can be undertaken have been taken up.

SRI K. S. ABDUL WAHAB: From the statement placed on the table of the House, I observe that big schemes like Kundah costing about Rs. 29 crores and Mettur Tunnel Scheme costing

* Printed as Appendix I on pages 63–72.

about Rs. 11 crores, were not anticipated in the Third Five-Year Plan. May I know the reason why such big items were not included in that plan itself and taken up?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Till the estimate is finalised, we cannot put it exactly as an item under the plan. But whenever it was finalised, it was added. There can be no objection to taking up Mettur Tunnel Scheme or Kundah Scheme under the Third Plan.

SRI G. KRISHNAMOORTHY : Is the excess due to the submission of further details by the various departments, and, if so, by whom are they scrutinised? Are they scrutinised at the Cabinet level or is there any Committee to do this planning work, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is the prescribed procedure for it, and if the hon. Member gives notice of a separate question, I will be able to answer it.

DR. H. V. HANDE : If there are items left out in the Third Plan, will they be straightway carried over to the Fourth Plan, Sir ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, they will be taken as a spill over.

Studios.

* 832 *Q.*—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) the number of studios which produce movie films;

(*b*) the number of workers employed in the industry;

(*c*) whether any minimum wage is fixed to them; and

(*d*) if so, the details thereof, with particular reference to the workers who do night duty?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Twenty-one.

(*b*) About 7(314. This does not include the workers in the film distribution section, information regarding which is not available.

(*c*) No.

(*d*) Does not arise.

DR. H. V. HANDE : Are these workers included in the Factories Act, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM . Some of them are included in the Factories Act.

SRI K. S. ABDUL WAHAB : Is there any ceiling on the maximum amount that a film star can get, Sir? (Laughter).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think, Sir. So far as I know, there is no ceiling.

Defence Fund.

*84 Q.—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the names of Cinema artistes who have promised to donate a part of their income towards the Defence Fuud;

(b) the names of persons who donate accordingly so far; and

(c) the amount donated so far?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No cinema artiste has promised to donate a part of his income towards the National Defence Fund.

(b) & (c): Do not arise.

Tractors

*85 Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Home be pleased to state:—

(a) whether it is a fact that some tractors used exclusively for agricultural purposes in South Arcot district have been seized; and

(b) if so, the details thereof and the reasons therefor?

கனம் திரு. பி. கக்கன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கே. சம்பந்தன்: சில டிராக்டர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தின் அதிகாரிகளால் பிடிக்கப்படுகிறது என்பது தெரியுமா? அவைகள் விவசாயத்திற்கு மாத்திரம் தான் உபயோகப் படுகின்றன, என்பது அரசாங்கத்திற்குத் தெரிய வந்திருக்கிறதா?

கனம் திரு. பி. கக்கன்: விவசாயத்திற்கு என்று டிராக்டர்கள் உபயோகப்படுமானல் அந்த டிராக்டர்களைப் பிடிக்கமாட்டார்கள். அதை வைத்துக்கொண்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு விட்டால் அப்பேர்ப்பட்ட டிராக்டர்களை பிடிப்பார்கள்.

திரு. எஸ். கே. சம்பந்தன்: அவர்களுடைய சொந்த தானியத்தை நிலத்திலிருந்து வீட்டுக்குக் கொண்டுவருதலும், களத்திற்குக் கொண்டு போதலும், விற்பனைக்குக் கொண்டு செல்வதும், விவசாய ஆப்பரேஷனில் சேர்ந்ததா அல்லது வேறு இனத்தைச் சேர்ந்ததா?

கனம் திரு. பி. கக்கன்: சொந்தத்திற்கு நிலத்திலிருந்து நெல்லைக் கொண்டுபோனல் அது விவசாயத்தைச் சார்ந்ததுதான். டிராக்டர்களில் விற்பனைக்குக் கொண்டுபோனல் அது விவசாயத்திற்கு என்று சொல்லமுடியாது.

DR. H. V. HANDE: Is it a fact, Sir, that tractors are lying idle for want of spare parts and, if so, how many of them are lying idle?

THE HON. SRI P. KAKKAN: A separate question may be put.

9th August 1965]

Procurement of Paddy and Rice

* 86 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food be pleased to state :—

(*a*) the quantity of paddy and rice procured by the State Government from 1st October 1964 to 10th May 1965;

(*b*) the working cost price and the price at which paddy and rice were sold;

(*c*) the quantity of paddy and rice received from the Food Trading Corporation up to 10th May 1965; and

(*d*) the price paid by the Madras Government to the Food Trading Corporation?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Five lakhs fifty six thousand two hundred and forty-one (5,56,241) tonnes of rice were procured by the State Government during the period from 1st October 1964 to 10th May 1965;

(*b*) Paddy was purchased at the prices notified by the Government for 1964–65 season. The paddy was procured either at the support price fixed or at the maximum prices fixed by the Government. The release prices were fixed by the Collectors, after taking into account the cost price, hulling charges and other incidental charges. The release prices so arrived at by the Collectors were within the maximum notified prices, except in certain exceptional cases.

(*c*) Nil.

(*d*) Does not arise.

DR. H. V. HANDE: Sir, from the statement furnished by the Hon Minister, we do not have any information about the purchase price and sale price of paddy?

THE HON. SRI V. RAMAIAH: Sir, a few days ago, in reply to a question I have given categorically all the facts and figures.

DR. H. V. HANDE: Sir, will the Government explain the financial liability on the State Exchequer on account of this commitment of our Government to the Food Corporation ?

THE HON. SRI V. RAMAIAH: I want notice of a separate question, Sir.

SRI M. SUBBIAH CHETTIAR: Sir, is there any difference in the price of rice sold by the Food Corporation and the price at which it is sold by the authorised agents and co-operative stores?

THE HON. SRI V. RAMAIAH: Sir, the Food Corporation does not sell rice to the co-operative stores. As far as our State is concerned, the Food Corporation is in charge of moving Government stocks from Andhra to our State and handing over that stock to us.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, my question is different. Is there any difference between the price at which rice is sold to the Food Corporation and the price at which it is sold to the wholesalers and the retailers?

THE HON. SRI V. RAMAIAH : Sir, we do not sell rice to the Food Corporation as such. Whatever rice is to be moved to Kerala is handed over to the Food Corporation at a fixed price. I do not think there is any difference. If the hon. Member requires a specific answer, he may put a separate question.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : ஒரு விவசாயி இடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்யும்போது தலைக்கு 22, 24 பைசா என்று வாங்கி விலைக்கு கொடுக்கும்போது 30 ரூபாய் வரை ஆகிறது. ஆகவே வியாபாரிகளுக்கு அதிக லாபம் வருவதால், கிராமப்பகுதிகளில் நெல்லை மக்களுக்கு விநியோகிப்பதற்கு உரிய முறையை அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. வி. ராமய்யா : இப்போதிருக்கிற நிலையில் அரிசியாகத்தான் கொடுத்துவருகிறோம். நெல்லாகக் கொடுப்பது என்றால் அது பரிசீலிக்க வேண்டிய விஷயம்.

SRI K. S. ABDUL WAHAB : Sir, what was the targeted quantity of rice or paddy for procurement during the period in question ?

THE HON. SRI V. RAMAIAH : There is no target as such. The Government are buying whatever is the marketable surplus.

SRI S. K. SAMBANDHAN : Is there any difference between the price we pay to the Andhra Government for the rice supplied by them and the price at which we are selling rice to Kerala, and if so, what it is ?

THE HON. SRI V. RAMAIAH : Sir, the prices vary according to the varieties.

Procurement of paddy.

* 87 Q.—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Food be pleased to state whether the Government are aware of the fact that the agents appointed by the Government for the procurement of paddy are collecting 15 paise per bag on account of measurement charges from the ryots ?

THE HON. SRI V. RAMAIAH : The agents appointed by the Collector for the procurement of paddy are not collecting measurement charges at 0.15 Paise per bag from the ryots, in any of the districts.

Assistant Surgeons.

* 88 Q.—SRI S. K. SAMBANDHAN (on behalf of SRI V. K. Ramaswamy Mudaliar) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of Assistant Surgeons in service under the emergency provisions;

9th August 1965]

(b) the number of such Assistant Surgeons who have put in more than one year of service;

(c) the reasons for continuing them under the emergency provisions; and

(d) whether there is any proposal to regularise their services in the near future?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) 700 as on the 20th May 1965.

(b) 375.

(c) Vacancies in the posts of Assistant Surgeons are being filled in under the emergency provisions, as recruitment for regular appointment has been suspended. No recruitment was made as the Government decided to reserve all the vacancies in the cadre of Assistant Surgeons, which arose during National Emergency, for candidates who render military service.

(d) The Government have since decided to reserve only 50 per cent of the vacancies for candidates with military service. Recruitment to the unreserved vacancies will be made shortly through the Madras Public Service Commission.

DR. H. V. HANDE: Why were not the doctors transferred straightway to the Military?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, some of them offered for military service and later on they had some domestic reasons which stood against their joining the military service.

DR. H. V. HANDE: Were they not selected for service in the military under the emergency selection?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Yes, they were. But later on they wrote back to the Director of Medical Services and said they were not willing to join the military service.

DR. H. V. HANDE: Were the doctors kept in the civil service?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Yes, but the reserved vacancies will not apply to them.

Mosquito Control Oil

* 89 Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Panchayats and Municipalities have been supplied with the mosquito control oil under the National Filaria Control Programme free of cost;

(b) whether it is being continued now; and

(c) if not the reasons therefor?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) National Filaria Control Programme is in operation in the endemic districts of Chingleput, North Arcot, South Arcot and Thanjavur in this State. The Panchayats and Municipalities in these districts are being supplied with the Moscuito larvicidal oil free subject to stocks being made available to the State by the Government of India.

(*b*) Yes.

(*c*) Does not arise.

DR. H. V. HANDE : Will the Hon. the Minister tell us why mosquitoes increased and why the Minister was not able to control them ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, the Health Minister is not responsible for the increase in mosquitoes. All measures necessary are being taken to control them.

DR. H. V. HANDE : If so, why are they increasing ?

THE HON. SRI R. VENKATARAMAN : They are not amenable to discipline Laughter).

SRI G. KRISHNAMOORTHY : Is the oil imported into our country, or is it manufactured in our country ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : It is manufactured here.

SRI K. S. ABDUL WAHAB : Do the Government of India allot any amount for this or supply it free, or do we obtain the supplies from out of our funds ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A certain amount has been allotted by the Government of India for the eradication programmes and that amount is utilised for this purpose.

SRI K. S. ABDUL WAHAB : May I know the amount allotted for last year and the amount spent ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A separate question may be put.

SRI S. K. SAMBANDHAN : Is the oil distributed to the Panchayats in the whole State or only to panchayats in the particular districts ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Whereever it is in a epidemic form, it is distributed. In all Panchayat Unions it is distributed by the District Health Officer.

SRI M. SUBBIAH CHETTIAR : Are the Government aware that the mosquito nuisance has spread everywhere throughout the State ? Is there any difference between the malarial mosquito and the ordinary mosquito, and, if so, may I know why it is not given to other districts?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : I do not deny the fact that the mosquito nuisance is there, but these mosquitoes are not malarial mosquitoes.

SRI S. K. SAMBANDHAN : Is it not a fact that the eradication of malarial mosquito programme is confined to certain districts only and not to all districts ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, Malaria eradication programme has been completed now and our State is completely free from malaria.

Government Headquarters Hospital at Nagercoil

* 90 Q.—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

3-20 p.m.

(a) the estimated expenditure for the Master Plan for expansion of the Government Headquarters Hospital in Nagercoil ;

(b) the extent to which the plan has been executed ; and

(c) if there is any shortfall, the reason for not executing the plan in full ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Rs. 19.40 lakhs.

(b) Rs. 7.692 lakhs.

(c) The Master Plan providing improvements to the Government Headquarters Hospital, Nagercoil, was prepared with a view to have, even from the beginning, a planned programme. The Master Plan was not given any administrative approval by the Government. Hence, the question of shortfall in executing the Plan does not arise.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்த மாஸ்டர் பிளான்படி அரசாங்க மருத்துவமனையை விரிவுபடுத்த நிலம் எடுத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது தற்போது எந்த நிலையில் இருக்கிறது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, the following improvements, which form part of the Master Plan, have had the administrative approval of the Government :—

Remodelling the hospital, improvements to the existing buildings and the hospitals, construction of V.D. clinic, construction of public health laboratory and construction of dental clinic. These are going to cost us Rs. 7,69,200.

DR. H. V. HANDE : Are the funds to come from the Five-Year Plan provision or from the State Exchequer or from the Cental Exchequer?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The amount that has been sanctioned will go into the phased programme. It is from the State Government funds.

[9th August 1965

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இன்று கேள்வி நேரத்தில் நான் வருவதற்குத் தாமதமாகிவிட்டதால் கேள்விகள் 63, 64 பதில் சொல்லாமல் விடப்பட்டிருக்கின்றன. தயவு செய்து அவற்றிற்கு பதில் அளிக்கும்படி சொல்லக் கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : I thought the hon. Member wanted to put a supplementary question. The answers to questions 63 and 64 will be printed in the official report of the proceedings.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, in view of the huge congestion at the headquaters hospitals, is there any master plan for improving the district headquarters hospitals so that the people can get easy admission into them ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : There is nc Master Pan at the moment for any of the district head quarters hospitals.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, ஏழு லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இ.என்.டி. பிரிவிற்கான ஸ்பெஷல் டாக்டரோ, அதற்குரிய பிரிவுகளோ இல்லாமல் இருக்கிறது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதுமாதிரி தகவல் அரசாங்கத்திற்கு வரவில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT *RE.* MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Madras recommending to the Legislative Council the consideration of Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965).

III.—CALLING ATTENTION TO THE STAGNATION OF HANDLOOM CLOTH IN THE CO-OPERATIVE AND PRIVATE SECTORS.

SRI S. K. SAMBANDHAN : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Industries to a matter of urgent public importance, namely, the stagnation of handloom cloth in the co-operative and private sector for a long time, which has resulted in the weavers losing their employment and so the necessity and the need on the part of the Government to take immediate steps to help the weavers by either procuring the whole stocks or by advancing them loans against their stocks.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I wish to make the following statement :—

The Government received reports of unusually heavy accumulations of handloom cloth with the producers particularly with the Apex and the Primary Weavers' Co-operative Societies in the

9th August 1965] [Sri R. Venkataraman]

State. It was estimated that the value of stocks held by the Apex and the primary weavers' co-operative societies was about Rs. 4.20 crores at the end of April 1965. The All India Handloom Week and Exhibitions were held in the State during April 1965 for a week in the first instance. The exhibition was extended by the Government for another week to push up sales. Even though the sales during the Handloom Week in April 1965 were to the extent of Rs. 158 lakhs which could be considered fairly satisfactory, the Government reviewed the situation and took further remedial measures to help to liquidate the accumulation of handloom cloth.

The Government sanctioned in May 1965 a temporary advance of Rs. 50 lakhs to the Tamil Nadu Handloom Weavers' Co-operative Society for the purpose of increased procurement of handloom cloth produced by the primary weavers' co-operative societies including silk and art silk and other non-cotton or mixed fabrics. Government have also guaranteed the loan, if any, incurred by the society in the course of its business up to a specified limit.

To provide incentives for buyers, Government have modified the scheme for payment of rebate on the sale of handloom cloth for a period of two months from 1st June to 31st July 1965 in the first instance and have since extended it up to 31st October 1965.

With the implementation of the modified scheme of rebate with effect from 1st June 1965, sales of handloom cloth to the extent of Rs. 171 lakhs were effected in June 1965 whereas the sales for the corresponding period during the last year was to the value of Rs. 128 lakhs.

With a view to enable the Apex Society to intensify its marketing activities during the current year, a recommendation was made to the Reserve Bank of India to increase the credit limit. The total credit limits recommended and given guarantee by the Government to the Reserve Bank of India, which was to the tune of Rs. 300 lakhs in 1964–65, has been enhanced to Rs. 335 lakhs in 1965–66.

The position in regard to procurement of handloom cloth made by the State Society has also improved. As against the average monthly procurement of the handloom cloth to the extent of Rs. 30 lakhs, the society procured handloom cloth worth Rs. 57 lakhs during the period from 1st June to 15th July 1965.

The position regarding marketing of handloom cloth is expected to improve from August 1965 onwards when procurement for the Pooja and Deepavali seasons commences. The question of extending the modified scheme of rebate beyond 31st October 1965 will be considered after watching the trend of sales.

As the Government do not provide any direct assistance to handloom cloth manufacturers in the private sector, the Madras Handloom Finance Corporation has been set up to give financial assistance to this sector. It is not a trading body and therefore cannot procure cloth. However, the financial accommodation given by the Madras Handloom Finance Corporation will enable

[Sri R. Venkataraman] [9th August 1965

the producers in the private sector to market their goods at favourable rates. This Corporation has granted loans to the tune of Rs. 20 lakhs till 31st July 1965. It will be granting loan totaling about Rs. 40 lakhs by 30th September 1965.

IV.—DISCUSSION ON THE DRAFT OUTLINE OF THE FOURTH FIVE-YEAR PLAN—*cont.*

MR. CHAIRMAN : Before the Hon. the Minister for Industries replies to the debate, Sri K. Anbazhagan will speak. He will limit his speech to half an hour.

* திரு. க. அன்பழகன் : சட்ட மன்ற தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய நகல்மீது சில கருத்துக்களை கூறுவதற்கான நல்ல வாய்ப்பு கிடைத்ததற்கான நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். பேசுகின்ற காலத்தை அறுதியிட்டு 30 நிமிடம் எனத் தாங்கள் சொல்லி இருக்கிறீர்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே குறிப்பிட்ட இலக்கை மீறியும் அத்திட்டம் போயிருக்கிறது. சில இடங்களிலே தொடாமலும் நின்றிருக்கிறது. இலக்கை மீறுவதும் தொடாமல் இருப்பதுமான நிலைமைகள் காரணமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளை எண்ணிப் பார்த்து அந்த அடிப்படையிலேதான் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை ஊகிக்க முடியும். அது குறித்து அமைச்சர் அவர்களேகூட மூன்றாவது திட்டத்தினுடைய முடிவை ஒட்டித் தான் நான்காவது திட்டத்தைக் காணவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். புள்ளி விவரங்களை வைத்துப் பார்க்கிற போது, அந்தப் புள்ளிவிவரங்கள் பெருகிப் பெருகித் தோன்றுகிற போது அந்தப் புள்ளிகள் நமக்கு மகிழ்ச்சி அளித்தால்கூட அந்தப் புள்ளி விவரங்களுக்கு ஒப்ப கிடைக்கக்கூடிய பலன் முழுவதும் மக்களுக்குச் சரியான முறையிலே கிடைக்காத போது குறைபாடு தோன்றத்தான் செய்கிறது. அதன் காரணமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரவேண்டிய நேரத்தில் இந்த திட்டத்தையே கொண்டு வருவது நல்லதல்ல என்ற கருத்து ஒரு சிலருக்கும், அதை ஒத்திப்போடவேண்டும் என்ற எண்ணம் வேறு சிலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மூன்று திட்டங்களும் முழுமையுடைய திட்டங்களாக முடிந்திருந்தாலாவது இன்று ஓய்வு கொள்ள முடியும். இந்த திட்டங்களெல்லாம் ஓரளவு நல்ல முறையிலே நிறைவேறி ஓரளவு நிறைவேறாத கட்டத்திலே இருக்கிற காரணத்தாலே இடை நிலையிலே நிறுத்தப்பட்டால் அதனால் பல திட்டங்களுக்கு குந்தகம் வருவது மட்டுமல்ல, அதன் காரணமாக ஏற்பட்ட சில வகை முன்னேற்றத்தையுங்கூடத் தடுத்துவிடக் கூடும். விரைந்து ஓடிக்கொண்டிருக்கிற மோட்டாரை நிறுத்துகிற போது விரைந்து ஓடுகின்ற மோட்டார் நிற்பதற்குப் பதில் தவிர்வதுபோல் ஒரு இக்கட்டான நிலைமை தோன்றக்கூடும். ஆகவே இதை எண்ணிப் பார்த்து நான்காவது திட்டத்தை முறையோடு நிறைவேற்றுவது அவசியம் என்ற கருத்தையே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

9th August 1965] [திரு. க. அன்பழகன்]

அமைச்சர் அவர்கள் இந்த நகலைத் தந்தபோது பல புள்ளி விவரங்களை தந்து இருக்கின்றார்கள். அந்தப் புள்ளி விவரங்களிலே பல மூன்றாவது திட்டத்திலே ஏற்பட்ட குறைபாடுகளை எடுத்துக் காட்டுகின்றன. சில அந்தக் குறைபாடுகளைத் தெளிவாகக் காட்டவில்லை.

உணவு உற்பத்தியைப் பொருத்தவரையில் இன்றைய தினம் நாட்டு மக்கள் மிகப் பெரிய கவலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். அதிலும் 'ரேஷனிங்' என்ற சொல் காதிலே விழுந்தவுடனேயே பலருக்கு கலக்கம் ஏற்படுகிறது. இந்த 'ரேஷன்' அளவுக்கு நிலைமை பாதகமாக ஆகிவிட்டிருக்கிறது என்றால் இதற்குப் பின்னர் இன்னும் பெரிய பஞ்சம் வரக்கூடுமோ என்ற சந்தேகம் வருகிறது. பஞ்சம் வராது என்று நம்ப இடம் இருந்தால்கூட, மக்கள் இந்த உணவுப் பிரச்னையிலே பல தொல்லைக்கு உள்ளாவார்கள் என்ற நிலைமை இருக்கிறது. முதலமைச்சர் அவர்களே கூடத் தமது உரையிலே

"These difficulties are real and cannot be slurred over. But we should not let these difficulties overwhelm us and bring the process of development to a halt. The difficulties which our National economy is currently faced with are due largely to the failure of agricultural production to come up to the earlier expectations"

என்று குறிப்பிட்டிருக்கிறார். எதிர்பார்த்த இலக்கைத் தொடாத காரணத்தாலே இந்த நிலைமை ஏற்பட்டது என்று முதலமைச்சர் அவர்கள் தனது உரையிலே தெரிவிக்கிறார்கள். ஆனால் எதிர் பார்த்த இலக்கை தொடாததற்கு என்ன என்ன காரணம் என்பது சரியாக ஆராயப்பட்டிருக்கிறதா என்று நாம் பார்க்கிறபோது முழு அளவுக்கு ஆராயப்படவில்லை என்று நான் உண்மையாகவே வருத்தப்படுகிறேன். மூன்றாவது திட்டத்தில் குறிப்பாக ஒவ்வொரு ஏக்கரிலேயும் விளைகின்ற தானியங்களின் அளவைப் பல்வேறு வகையான தானியங்களைப்பற்றிய புள்ளி விவரங்கள் காட்டுவது இது. அரிசி விளைச்சல் 1951-ல் 1,016 ராத்தல், 1955-56-ல் 1,213 ராத்தலாக, 200 ராத்தல் அளவுக்கு, 20 சதவிகிதம் உயர்ந்து இருக்கிறது. ஆனால் அந்த உயர்வு 1960-61-லே வெறும் 1,261 ராத்தலாகத்தான் இருக்கிறது. அதில் வளர்ச்சி கிட்டவில்லை. வேண்டுமானால் போதுமான உரம் கிடைக்கவில்லை என்று காரணம் சொல்லக்கூடும். ஆனால் அதுமட்டுந்தான் காரணமா என்று ஆராய்ந்தால், வேறு பல காரணங்களும் இருக்கக்கூடும்.

3-30 p.m.

அதே போல இன்னொரு பயிரைப்பற்றி பார்க்கிறபோது கம்பு 1950-51-ல் 400 ராத்தலாக இருந்தது. பல திட்டங்கள் போட்டதற்குப் பிறகு 1955-56-ல் 372 ராத்தலாக குறைந்து திடீரென்று 1960-61ல் 550 ராத்தலாக உயர்ந்து இருக்கிறது. அதே போல இன்னொரு பயிரைப் பார்க்கிறபோதும், பருத்தி 1950-51-ல் 120 ராத்தலாக இருந்தது. 1955-56-ல் 110 ராத்தலாகக் குறைந்து 1960-61-ல் 149 ராத்தலாக உயர்ந்து இருக்கிறது. எனவே இது புள்ளிவிவரங்களை சேகரிப்பதிலே இருக்கிற குறைபாடுகளின் விளைவாக இருக்குமோ என்று கூட ஐயுறுகிறேன். இந்த புள்ளி விவரங்களை முழு அளவுக்கு நம்பி ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இல்லை என்பதை நான் குறிப்பிடுவது அவசியமாகிறது.

[திரு. க. அன்பழகன்] [9th August 1965

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது புதிய நிலங்களை பயிர்ச் செலவுக்குக் கொண்டுவருவதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று 7 லட்சம் ஏக்கர் நிலத்தைப் பயிர்ச் செலவுக்குக் கொண்டுவரப் பெரிய திட்டத்தை மேற்கொள்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நோக்கில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே போதிய அளவு நிலம் புதிய பயிர்ச் செலவுக்கு கொண்டுவரப்பட்டதாகவும் தெரியவில்லை. அதற்கு ஊக்கம் அளிக்கப் போதிய முயற்சி எடுத்துக்கொள்ளப்படவுமில்லை. நீர்ப் பாசனத்துக்காக போதிய புதிய வாய்ப்பு இங்கே இல்லை என்று சொன்னாலும் நிறைவேற்றப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொது மக்கள் எந்த வகையில் பயன்படுத்திக்கொள்ள வழி வகுக்க வேண்டுமோ அப்படி வழி வகுக்கவும் தவறி இருக்கிறார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு பல நோக்கு திட்டம் 1964 மார்ச்சிலே ஒரு லட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் தர முடியும் என்று கூறப்பட்டது. அந்த இலக்கை அடையாததற்குக் காரணம் பொது மக்களின் ஒத்துழைப்பு இல்லை என்று சொல்வார்கள். பொது மக்களிடம் பல குறைபாடுகள் இருந்திருக்கக்கூடும். ஆனால் 50 விழுக்காடு அளவுக்குத்தான் அத்திட்டம் நிறைவேறி இருக்கிறது. மிச்சம் 100-க்கு 50 விழுக்காடு நீர்ப்பாசன வசதி அவர்களுக்கு ஒழுங்காக தரமுடியாத காரணத்தால் விளைபொருளை அதிகப்படுத்தக்கூடிய கடமை தவறிப்போய் இருக்கிறது.

அதேபோன்று பல்வேறுவிதமான புதிய விவசாயக் கருவிகளையெல்லாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாங்கள் விவசாயிகட்கு வழங்குவோம் என்று சொன்னார்கள். பிறகு கருவிகளை வழங்க முடியாத நிலைமையிலே நிறுத்தி இருக்கிறார்கள். அப்படி நிறுத்தப்பட்ட கருவிகளின் பெயர்களையும் குறிப்பிட்டு அந்தக் கருவியை உற்பத்தி செய்கிறவர்கள் நிறுத்தி விட்டதே காரணம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி சில கருவிகளும் தரப்படவில்லை.

அதேபோல மற்ற வகையில் எண்ணிப்பார்ப்போமானால் தழை உரத்தை உற்பத்திச் செய்வதற்கு அவர்கள் மேற்கொண்ட உற்பத்தி அளவை எட்டிப் பிடிக்க முடியவில்லை.

இப்படிப் பல்வேறு காரணங்களாலே—சிறு சிறு காரணங்களாக இருக்கலாம்,—அதனாலே விளைபொருள்கள் தேவையான அளவு உற்பத்தி செய்ய முடியாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியை உண்மையாகவே நாம் மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று விரும்புகிறேன். புதிய திட்டங்கள் போட்டுவிடுவதாலே மட்டும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாங்கள் இவ்வாறு திட்டங்களை நிறைவேற்றப்போகிறோம் என்று சொல்கிற காரணத்தாலே மட்டும், அந்தத் திட்டங்களை அப்படியே நிறைவேற்றப் போகிறார்கள் என்று எதிர்பார்க்க முடியும் என்று நம்புவதற்கு காரணம் இல்லை, பெரும் பகுதியை நிறைவேற்றுவார்கள் என்பதிலே ஐயமில்லை. ஆனால் சொல்லுகிற ஒவ்வொரு புள்ளி விவரமும் அப்படியே நிறைவேற்றப்படுமா, அல்லது எற்றுக்கொள்

ளப்பட்டிருக்கிற ஒவ்வொரு தனிப்பட்ட தலைப்பிலும் அந்தக் கடமைகள் அவ்வாறே நிறைவேற்றப்படுகின்றனவா, என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இப்போது கேள்வி நேரத்தில் அமைச்சரவர்கள் பதில் அளித்த போது சொல்லி இருக்கிறார்கள், ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் சில தலைப்புக்களிலே அதிகமாகவே புதிய தொகை ஒதுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் முன்னாலே சொன்ன திட்டங்கள் பல கைவிடப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்கிறபோது அவையெல்லாம் நியாயமான காரணங் களாலேதான் கைவிடப்பட்டன என்று சொல்ல முடியாது. ~~போதுமான ஊக்கம் காட்டாத காரணத்தாலே கைவிடப்~~ போதுமான முயற்சி எடுத்துக் கொள்ளாத காரணத்தாலே கைவிடப் பட்டிருக்கின்றன என்று கருதவேண்டும். யூனிவர்சல் ஆட்டோ பிரேம் என்ற கருவி வழங்குவது 1962–63-ஓடு நிறுத்தப்பட்டிருக் கிறது. அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையிலே சிறிய பகுதி தான் செலவிடப்பட்டிருக்கிறது. நவீன விவசாயக் கருவிகளுக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 20 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. பதினொரு லட்சம் மிச்சம் இருக்கிறது. பணம் போய் விடவில்லை என்பது தெரியும். ஆனால் அந்த வகையிலே உற் பத்தியைப் பெருக்குகின்ற கடமை தடைப்பட்டிருக்கிறது. பசுந் தழை உரத்துக்கு ஒதுக்கியது 25 லட்சம். நடைபெற்றது 8,65,000. அதே போல இந்த விவசாய தொடர்புடைய கிராமப் பல்கலைக் கழகம் தொடங்குவதாக கருத்து இருந்தது. அது அடையாளத் தொகை ஒதுக்கியதோடு நின்றுபோய்விட்டது. விவசாயக் கால்நடை மருத்துவ கல்லூரிகளை விரிவு படுத்த ரூ. 5,62,000 ஒதுக்கப்பட்டது மூன்றாவது திட்டத்திலே. அந்தத் தொகையும் செலவிடப்படவில்லை. இந்தச் செயலையும் நடத்தத் தொடங்கவில்லை. தீவிர விவசாய மாவட்டத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 150 லட்சம். ஆனால் செலவழிக்கப் பட்ட தொகை ரூ. 56.83 லட்சம். அதே போல துணை உழவுப் பொருள் உற்பத்தியை பெருக்குவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 10 லட்சம். செலவழிக்கப்பட்டது ஒரு லட்சம் ரூபாய் அளவு.

மற்றொரு கருத்து நில உடைமைகளையெல்லாம் ஒன்று படுத்த வேண்டும் என்பது. உரிமைகளை ஒன்றுபடுத்துவது அல்ல. விளை நிலங்கள் தனித்தனியாக துண்டு துண்டாக இருக்கிற காரணத் தாலே விவசாயத்தின் வளர்ச்சி தடைப்படுகிறது என்பதால் சிறு சிறு துண்டு நிலங்களை ஒன்றுசேர்த்து அமைத்து விளைச்சலைப் பெருக்க அடையாளத் தொகை ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப் பட்டது. அந்த வகையிலே செலவு ஏற்படவில்லை. துளைக் கிணறுகள் அமைப்பதற்காக 50 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் துளை போடும் கருவிகள் இல்லாததாலோ என்னமோ அந்தத் தொகை செலவழிக்கப்படவில்லை. புதிய கிணறுகள் வெட்ட 100 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது ; 400 லட்சம் வரை அதிகமாகவே அதில் செலவழிக்கப்பட்டது. இந்தத் திட்டம் காரணமாக ஒரு வேளை துளைக் கிணறுகள் திட்டம் கைவிடப்பட் டிருக்கக்கூடும் என்று நினைக்கிறேன். தனிப்பட்டவர்களுக்கு

உதவும் திட்டங்கள், கடன் திட்டங்கள் இலக்கை மிஞ்சிவிடுகின்றன. அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் இலக்கிற்குக் கீழே விழுகின்றன. இதைப் பார்க்கும் போது, தனிப்பட்டவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய நெருக்கடி அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. இதன் காரணமாக அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாது போகின்றன. கால்நடைப் பண்ணைகள் அமைக்க 50 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது, 40,000 ரூபாய்தான் செலவு செய்யப்பட்டது. கால்நடை இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைத் தொடங்கப் போவதாக சொல்லியிருந்தார்கள். அந்தத் திட்டத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாததால் அது தொடங்கப்படவில்லை. விவசாய ஆராய்ச்சிக் கழகத்திற்காக 7½ லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது, 2½ லட்சம் ரூபாய் கூடச் செலவாகவில்லை. உருக்கு உருளைகள் ஆலைக்காக 3 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது, 15,000 ரூபாய்தான் தொடக்க நிலையில் செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் மற்ற வகையில் கைத்தறிநெசவாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவதற்காக 3 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது, 48.3 ஆயிரம் ரூபாய்தான் செலவழிக்கப்பட்டது. பலநோக்குப் புள்ளிகள் துவக்க 39 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது, 8 லட்ச ரூபாய் தான் செலவழிக்கப்பட்டது. உயர் இடை நிலைப்பள்ளி ஆசிரியர்கட்கு பயிற்சி அளிப்பதற்கு 16 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது, 15 ஆயிரம் ரூபாய்தான் செலவழிக்கப்பட்டது. ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகளுக்காக 100 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது, 48 லட்ச ரூபாய் தான் செலவழிக்கப்பட்டது. தொழு நோய்த் தடுப்பிற்காக 60 லட்ச ரூபாய் மூதுக்கப்பட்டது. 30 லட்ச ரூபாய்தான் செலவழிக்கப்பட்டது. மாணவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்க 10 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது, செலவழிக்கப்பட்டது 37 ஆயிரம் ரூபாய் தான். இவ்வாறு பல திட்டங்களில், வகுக்கப்பட்ட இலக்குகளை அரசாங்கம் அடையவில்லை, ஒதுக்கப்பட்டது, பணம் மிச்சமின்றி செலவழிக்கப்படவில்லை. பணம் திசை திருப்பிவிடப்பட்டிருக்கக் முக்கியமான காரியங்களுக்காக இவ்வாறு பணம் திசை திருப்பி விடப்பட்டிருப்பதாக மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் வாதிக்கக்கூடும். அவர்களுக்கு வாதத் திறமை நிறைய உண்டு. மூன்றுவது திட்டத்தில் இந்த நிலைமையைப்பார்க்கும் போது நான்காவது திட்டமும் இதே பாதையில் தான் செல்லுமோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. எந்த எந்தத் திட்டங்கள் கைவிடப்படுகின்றன, அவை எந்த எந்த ஆண்டில் கைவிடப்படுகின்றன, அதற்குக் காரணங்கள் என்ன என்பதை அரசாங்கம் அவ்வப்போது தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

3-40 p.m.

உணவு உற்பத்தியை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு சிறு நிலப் பகுதியிலும் நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்கள் முழு அக்கறையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நம் நாட்டில் உணவு உற்பத்தியை கணிசமாகப் பெருக்க முடியாது. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெரும் செல்வந்தர்கள் விவசாய உற்பத்திப் பெருக்கத்தில் அக்கறை செலுத்துவதில்லை. ஏழை விவசாயிகளும் நிலத்தோடு கட்டிப்புரளத் தயாரா

யில்லை. இந்நிலையில் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கக்கூடிய ஒவ்வொரு சிறு வழியையும் அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் துணைத் தலைவர், நம் நாட்டில் டிராக்டர்களைக் கொண்டு உழக்கூடிய நிலைமையில் பெரிய பரப்புடைய அளவில் நிலம் இல்லை என்று குறிப்பிட்டார். டிராக்டர் போன்ற பெரிய கருவிகளை எல்லோரும் பயன் படுத்தக்கூடிய நிலைமை நம்நாட்டில் இல்லை. இரண்டு அல்லது நான்கு மாடுகளின் சக்தியைப் பயன்படுத்தி இயக்கக்கூடிய அளவில் ஒரு சிறு டிராக்டரோ அல்லது சிறு கருவியோ இருக்குமானால், அத்தகைய கருவிகளை இந் நாட்டில் ஒவ்வொரு சிறு விவசாயக் குடும்பமும் கையாள முடியும். இந்நாட்டில், பல பாதைகளில் ஒரு முறை பெரிய டிராக்டர் சென்றால், டிராக்டர் சென்ற வழியான களிமண் பாதை அழிந்துபோய்விடுகிறது. நம் நாட்டிற்கு ஆள் நின்று கொண்டு செலுத்தக் கூடிய டிராக்டர்கள் வேண்டும், ஜப்பானில் செய்யப்படும் ஒருவிதக் கருவியை—இயந்திரத்தை—பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படும் என்று நான்காவது திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறை எளியவர்களும் பயன் படுத்தக் கூடிய அளவிற்குக் கொண்டு வரப்படவேண்டும். இந்த இயந்திரம் சாதாரணக் குடியானவர்களுக்கும் கடன் உதவி அடிப்படையில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் தான் விவசாயிகளுக்கு விவசாயத்தில் ஊக்கம் ஏற்படும். இந்த நாட்டில் இப்போது கால்நடைகள் ஏராளமாக இருந்தாலும் கால்நடைகள் செல்வமாக செழிப்பா இல்லை. குழந்தைச் செல்வமே இப்போது இந்த நாட்டில் செல்வமாக இல்லாதது போல கால்நடைகளும் இப்போது இந்நாட்டில் செல்வமாக இல்லை. எனவே விவசாய இயந்திரங்களை சிறிய அளவுடையதாகப் பெருக்கினாலொழிய உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாது.

மேலும், பொது மக்களின் நிலைகளுக்கேற்ப அரசாங்கம் செயல்பட வேண்டும். மக்களுக்கு அதிக ஆசைகளை ஏற்படுத்தி அவைகளை பூர்த்தி செய்ய அரசாங்கம் முன்வராததினால், ஏற்படும் குறைகள் பல. நில உச்ச வரம்புச் சட்டத்தினால் அதிகப் பலன் ஏற்படும் என்று பொதுமக்கள் எதிர்பார்த்தனர். அச்சட்டத்தினால் தங்களுக்கு நிலம் கிடைக்கும் என்று ஏழை விவசாயிகள் எதிர்பார்த்தனர். அச்சட்டம் நடைமுறைக்கு வந்ததால் அரசாங்கத்தால் எத்தனை ஏக்கர் நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டது என்று கேட்கப்பட்டபோது, 125 ஏக்கர் நிலம் அரசாங்கத்திற்கு வந்ததாக மதிப்பிற்குரிய அமைச்சர் தெரிவித்தார். ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கில் அது 45 ஏக்கர்தான் என்றும் சொன்னார். இவ்வளவுதான் இன்றளவும் உள்ள நிலை என்றால் இந்தச் சட்டத்தினால் தங்களுக்கு நிலம் கிடைக்கும் என்று எதிர்பார்த்த ஏழை விவசாயிகள் ஆசை நிறைவேறவில்லை. கூட்டுறவு முயற்சியிலும் உணவு தானிய உற்பத்தி பெருகவில்லை. கூட்டுறவுப் பண்ணை என்றாலே அங்கு ஊழல்கள் இருக்கும் என்ற எண்ணம் தான் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நிலைமை இப்படி இருந்தால் விவசாயிகளுக்கு உழவுத் தொழிலில் எப்படி ஆர்வம் பிறக்கும்? அந்த ஆர்வம் இல்லாவிட்டால், எப்படி விளைச்சலைப் பெருக்க முடியும்? புள்ளி விவரத்திலேயே பலன் காட்டிவிடலாம்.

என்பது அரசாங்கத்தின் நோக்கமாக இல்லாமல் இருந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் 47 லட்சம் மெட்ரிக் டன்னுக இருந்த விளைச்சல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 57 லட்சம் மெட்ரிக் டன்னுக உயர்ந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 70 லட்சம் டன்னுக உயர்ந் திருக்க வேண்டும். அது அப்படி உயர்ந்திருக்க வேண்டுமானுல், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 13 லட்சம் டன் கூடுதலான தானிய உற்பத்தி செய்திருக்க வேண்டும். 13.5 லட்சம் மெட்ரிக் டன் அளவு உயர்த்த முடியாத நிலைமையினுல் தானிய உற்பத்தி 65 லட்சம் மெட்ரிக் டன்னுகத்தான் இந்த ஆண்டு முடிவில் நமக்கு கிடைக்கும் என்று தெரிவித்தார்கள். அதே நேரத்தில் 82 லட்சம் மெட்ரிக் டன் அளவை வருகின்ற திட்ட காலத்தில் எட்டிவிடு மென்றும் சொல்கிருர்கள். ஆனுல் 16.5 லட்சம் மெட்ரிக் டன் அளவு ஏன் கடந்த காலத்தில் கிடைக்கவில்லை என்று ஆராய வேண்டும். உற்பத்தி அளவில் குறை இருக்கிறது என்று உணர்ந் தால், பருவ கோளாறுகள் இருந்தாலும் சரி, இந்த தடவை வந்தது அடுத்த தடவை வராதா, என்ற கேள்வி வரும். அது எதனுல் ஏற்பட்டிருந்தாலும் 82 லட்சம் மெட்ரிக் டன் அளவு நிச்சயமாக எட்டிப்பிடிக்க முடியுமா, என்று நிபுணர்களை கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதை நிறைவேற்று வதற்கு வழிவகை காண வேண்டுமென்று இந்தத் திட்டத்தைப் பொருத்தவரையில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாகக் கல்வியைப் பொறுத்தவரையில் இந்த நாட் டில் கல்வி என்பது மக்களுடைய உரிமையாக மாறி வருகிறது. மக் களுடைய உரிமையாக இருக்கிற கல்வியை மக்கள் அனைவருடைய தேவையையும் நிறைவு செய்யும் வகையில் நடத்தியாகவேண்டும். மக்கள் அனைவருக்கும் பரவலாக வழங்கப்படுகிற காரணத்தால் கல்வியின் தரம் குறைந்துபோனுல் கவலைப்படமாட்டோம் என்றும் விட்டுவிட முடியாது. அதற்கு வரைமுறை செய்யவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் கல்வித் திட்ட முறையை மாற்றக் கூடாது, என்று கல்வி நிபுணர்களாக உள்ள எதிர்க் கட்சித் தலைவர் எடுத்துச் சொன்னுர்கள். அதை மறுபடியும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். கல்வியைப் பற்றியும் பாடத் திட்டங்களைப்பற்றியும் நிபுணர்கள் சொல்கிற கருத்துக்களை மறுப்பவன் அல்ல நான். நடைமுறையில் ஆயிரக்கணக்கான பள்ளிகளில் பதிஞேராவது வகுப்பு படித்த பிறகு பி.யு.சி. வகுப்பில் படிக்கத் தேவை இல்லாமலே மேலே செல்வதற்கான நிலையை ஏற்படுத்த எண்ணுவதாக அரசாங்கத்தால் முன்னர் தெரிவிக்கப் பட்டது. பதிஞேராவது ஆண்டு என்று சொல்கிறபோது பி.யு.சி. வகுப்புக்குச் சமம் அது என்று சொன்னுர்கள். அந்தத் தகுதியை யும் தரத்தையும் காப்பாற்ற முடியாத காரணத்தால் பத்தாவது வகுப்புக்கு ஈடாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்போது பதிஞேராவது வகுப்பு தேறிய மாணவர்கள் பி.யு.சி.-யில் இடம் பெற முடியாமல் இடர்ப்பாடு அடைகிருர்கள். திருச்சி, சென்னை போன்ற பெரு நகரங்களில் ஆயிரம், ஐநூறு அளவில் மாணவர்கள்

9th August 1965] [திரு. க. அன்பழகன்]

In respect of taxation also, there are two different views. I am not going to canvass for either, but I want to place them before the House for mere information. There is one section of enconomists who think that the level of taxation in India is low. According to them, in India; the *per capita* income being so low as Rs. 350 or Rs. 360, our exemption limit of Rs. 3,000 for income-tax is very high and unconscionable. Therefore, they say, the taxation is low. On the other hand, foreign exchange is going to be a very difficult problem. How are we going to meet it? In order to get over the foreign exchange problem, the Government of India are now suggesting, for instance, the use of indigenous raw materials in the place of the imported, the use of indigenous machinery in the place of the imported and the opening of design centres which will design new machinery in the country itself. Sir, in order to do that, we must get at least a basic quota of foreign exchange. We cannot build from search. The hon. Member Subbiah Chettiar instanced Japan the other day, and said we had not achieved any improvement like Japan in the last ten years. He also said "Take Germany, we are nowhere near the development made by Germany in the last ten years." Even at the risk of taking a little time. I would like to give to the House an experience which I had in Germany. I went to Germany after the war, and then there was mere ramshackles. Everything was burnt to ashes. The factories were all in complete ruin. Ten years later, factories have sprung up and they are all producing much better than what they did before the war. I asked them, "Please tell me the secret as to how within ten years you are able to rebuild all these things, while we, with 15 years' experience, have not been able to go even upto 1/50th of 1/40th of what you have done." Then the economists told me, 'It is true that the war destroyed our factories, but the war could not destroy our skills. skills which have been developed through 200 or 300 years. Along with the other people in the world, we designed; we invented, we introduced new technology. new methods and that is still with us. Therefore, it was feasible for us to build'. It is the samething with Japan or any other country, which had taken part in the industrial revolution. No country in the world which has not participated in the industrial revolution and which did not advance along with the other countries in the field of industrialisation, has reached that amount of technological growth or industrial growth as India has done. Therefore it is wrong to compare India with Japan or Germany. We should see the skills that we are now developing. The progress is fast and we are able to dispense with foreign assistance as quickly as possible.

[Sri R. Venkataraman] [9th August 1965

I have only a few more small observations to make. If by chance I do not refer to other members, it does not mean that they have not made any valuable contribution; it is just because that they do not come under the classifications which I have adopted for replying.

The hon. Member Sri Rajah Iyer gave some valuable suggestions with regard to training schools. He said that in the training schools there should be no stipend at all and this stipend was a waste of money. I do not know how far Mr. Krishnamurthy would agree to that. But the point about training schools is that we will admit such number of training students as are required as teachers in the year to come. It is not general education. We cannot admit everybody into the training school. The purpose of training schools is to find and recruit the requisite number of teachers who will be required at the end of one or two years. And that is why we are not providing facilities for everybody to go into the training school.

4–50 p.m.

Sri Krishnamoorthy said that there were enormous extents of uncultivated lands. I would like to go with him and see them for myself. The *per capita* ownership of land in the State is 0.6 acre. This is one of the lowest, barring perhaps Kerala. There is not much land. The lands that we can see by the railway line are not cultivable at all, and even if they are cultivated, the cost of production will be much greater that the yield would be uneconomic.

Now, I am thankful to the members of the D.M.K. party for the support they have given to the Plan as a whole. They have dissociated themselves from another party, which said that the plan should be delayed or it should be reduced. In fact there may be differences of opinion with regard to the size of the plan. But there can be no difference of opinion as to the necessity for the plan. The hon. Members Sri N. V. Natarajan specially mentioned it and emphasised the point.

Two things which have been repeated by the members are the Salem Steel Plant and the Hogenekkal scheme. I have already stated that so far as the Hogenekkal Scheme is concerned, we have to get the consent of the neighbouring State, Mysore. We are doing our best. This is a case of what we call in Dickens's novel "Barkis is willing to marry, but Puggoty has to give consent". Here also we are keen on having the Hogenekkal Scheme. We are positive that it will be one of the cheapest hydro-electric schemes and it will be of immense advantage and use to the Mysore State also. Some little doubts and anxiety expressed by officials in the newspapers that this will hurt their share of waters, I am afraid, has no basis, because the sharing of water will be discussed between the two States in 1974, when the agreement expires and a new agreement will be entered into. There is no question of sharing the water. The water already flowing out of Krishnarajasagar will be utilised to the advantage of both the States. We

9th August 1965] [Sri R. Venkataraman]

have offered to them that we will share the cost of power in spite of the fact that one of the hydro-generators would be exclusively on the side of the Madras State. We look forward to the discussions turning fruitful. The Planning Commission Member in charge of Electricity, Professor Thacker, is coming over to Madras for discussions on the matter. After discussions with us, he will be proceeding to Mysore. Let us hope for the best.

So far as the Salem Steel Plant is concerned, we have done all we can. The Opposition or any other person in this State could not say that the Madras Government have failed in anything. We have taken advantage of the new and improved technology which utilises the low grade iron ore and lignite. We had all the experiments conducted so that nobody will be able to say : " No, the scheme is not technically feasible ". We have shut out any such argument by all the steps which the State Government took over the period. We have got the report in which the capital cost of steel per tonne in various other Hinduism Steel Projects, such as the Rourkela and Bhilai, is compared, and it has shown that the Salem Steel Plant will be comparable. I must express my gratitude and thanks to the Japanese Consulting Institute for their interest in this scheme. They are sending out a team. There can be no criticism whatsoever of this Government in respect of the Salem Steel Plant or the steps that they have taken to implement it. Of course there are a number of imponderables in everything. And there are some differences of opinion expressed in certain quarters. But I do hope that ultimately the scheme will be put through and we will have the only steel plant in the whole of India which will go into production and produce some steel in the Fourth Plan period. Even if the other plant are put through, even if they are sanctioned and money expended on them such as Vizag or Hospet plant—no one of these will go into production as soon and as quickly as the Salem Steel Plant, because all the preliminary work for the plant has already been completed and it is just in the position of immediately starting on work. I do hope that the Government of India will approve and include it in the Plan and we hope for the best.

Sir, I do not want to take more of the time of the House. I am sorry I have taken a little longer time than usual. I am very grateful to the House for the patient hearing they have given me and I trust they will approve the plan as a whole.

MR. CHAIRMAN : Now, the discussion on the Draft Outline of the Fourth Five-Year Plan is over. We will now take up the Government Bills.

[9th August 1965

V.—GOVERNMENT MOTION.

MOTION UNDER RULE 21 (3) OF THE COUNCIL RULES.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, I move—

" That under Rule 21 (3) of the Madras Legislative Council Rules, the order business arranged in the list for today be revised and item (2) under ' Government Bills ' be taken up before item (1)."

MR. CHAIRMAN : The question is :

" That under rule 21 (3) of the Madras Legislative Council Rules the order of business arranged in the list for to-day be revised and item (2) under ' Government Bills ' be taken up before item (1).".

The motion was put and carried.

VI.—GOVERNMENT BILL.

THE MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT BILL, 1965 (L.A. BILL NO. 16 OF 1965).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Chairman, Sir, I move :

" That the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 [a] (L.A. Bill No. 16 of 1965), as passed by the Assembly, be taken into consideration.".

Hon. Members may remember that the Madras City Municipal Corporation (Amendment) Act, 1961 came into force in April 1962. Several difficulties are now being experienced in the working of the principal Act and hence Government are considering the question of amending the Act comperehensively. As this may take some time, it has been decided to introduce a Bill containing a few important amendments to the Madras City Municipal Corporation Act, 1919. The following are the sailent features of the Bill :

The conditions of service of the Commissioner which included his pay, leave, leave salary, term of appointment, etc., can be regulated by Government under sub-section (5) of Section 7 of the Act. Hence sub-section (1) of Section 8 and Section 14 are unnecessary. Clauses 2 and 3 of the Bill seek to omit these provisions.

Under the proviso to section 24 of the Act if any resolution of the Corporation Council or a committee constituted under the Act contravenes any provision of any statute, rule notification, regulation or by-law or any order passed by the Government, an obligation is cast on the Commissioner to refer the matter to the Government for orders within 15 days of the passing of the

[a] Printed as Appendix II on pages 72–77.

9th August 1965] [Sri M. Bhaktavatsalam]

resolution and inform the council or the committee, as the case may be, of the action taken by him at its next meeting. The time limit of 15 days has been found to be too short. It is, therefore, proposed to enlarge the period to 30 days and also to empower the Government to grant an extension of time not exceeding 15 days. Clause 4 of the Bill as passed by the Assembly provides for this.

5-00 p.m.

Section 41 of the Madras District Municipalities Act, 1920, empowers the State Government to dissolve or supersede a Municipal Council, if in their opinion, the council is not competent to perform or persistently makes default in performing the duties imposed on it by law or exceeds or abuses its powers.

The Madras City Municipal Corporation Act does not contain any such provision and also similar to the provision in section 41 of the Madras District Municipalities Act, 1920. Further, though there are certain powers vested with the State Government like the power to call for records, to cause inspection to be made, to direct the taking of action, to appoint a person to take action in default at the expense of the Corporation and to cancel resolution and by-law, it has been felt on many occasions that the existing provisions are not adequate enough to meet certain contingencies. Hence it is proposed to amend the Madras Corporation Act for making this enabling provision on the lines of Section 41 of the Madras District Municipalities Act, 1920. Clause 5 of the Bill seeks to incorporate such a provision. A similar provision exists in Section 490 (1) of the Delhi Municipal Corporation Act, 1957. The Calcutta Corporation has also once been superseded for a period of four years up to 1952. A few days back, the Maharastra State Government has under the Nagpur Corporation Act, issued a show cause notice to the Nagpur Municipal Corporation as to why the Corporation should not be superseded as the Corporation has exceeded and abused its powers in the case of water-supply and repayment of loans.

Under Section 7 of the Act, the Commissioner, the two Assistant Commissioners and the Personal Assistant to the Commissioner are appointed by the State Government. Under section 85 of the Act, every appointment of a Health Officer, an Engineer, an Electrical Engineer, a Revenue Officer, a Chief Accounts Officer and an Educational Officer has to be made by the Council of the Corporation out of a panel of names prepared by the State Government. As these Officers are heads of departments, it is appropriate that they are appointed by the State Government themselves. Necessary provisions in this behalf have been proposed in the Bill.

The question of improving the administrative efficiency of the City Municipal Corporation has been engaging the attention of Government since a long time. After careful consideration, the Government have come to the conclusion that for this purpose the State Government should have the authority to provincialise any category of posts in the Corporation. To ensure that recruitment

is fair and impartial and that selections are made on merit, consultation with the Madras Public Service Commission is essential. Such consultation is done by Government in regard to posts to which they make the appointment. It is therefore considered that a similar procedure may be followed in regard to the posts under the Corporation also. Necessary provisions in this behalf are proposed in new sections 94 to 97.

Under the proviso to section 142 of the Act, no loan can be raised by the Council without the previous publication of the application under the Local Authorities Loans Act, 1914 and the rules issued thereunder. As this procedure involves delay, it is proposed to delete the provision requiring such previous publication. Clause 12 provides for this.

With these words, Sir, I commend the Bill, as passed by the Legislative Assembly, for the consideration of the House.

MR. CHAIRMAN : The amendment may also be moved so that the motion and the amendment may be discussed by the House.

SRI K. ANBAZHAGAN : Mr. Chairman, Sir, I move—

" That the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965) be referred to a Select Committee of the Legislative Council consisting of the following Members :—

The Hon. Sri S. M. A. Majid,
Sri K. Anbazhagan,
Sri M. Subbiah Chettiar,
Sri K. Rajaram,
Sri K. R. Ramasamy,
Dr. H. V. Hande, and
The Hon. Sri M. Bhaktavatsalam (mover of the Bill)."

திரு. என். வி. நடராசன் : திரு. அன்பழகன் பிரேரேபித்துள்ள திருத்தத்தை நான் வழி மொழிகிறேன்.

MR. CHAIRMAN : The motion and the amendment are before the House for discussion.

திரு. எஸ். கே. சம்பந்தன் : கனம் தலைவர் அவர்களே, சென்னை நகர கார்ப்பொரேஷன் சட்டத்தைத் திருத்த அரசாங்கம் கொண்டு வந்துள்ள திருத்தங்களில் ஒரு சிலவற்றை ஆதரிக்கிறேன். கார்ப்பொரேஷன் அலுவலர்களின் அந்தஸ்தை அரசாங்க அலுவலர்களின் அந்தஸ்திற்குச் சமமாக ஆக்குவதற்குக் கொண்டு வந்துள்ள திருத்தம் அவசியமானது. அதைக் கொண்டு வந்ததற்காக அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். ஒரு சில திருத்தங்களை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். சென்னை நகரசபைக்கும் அதுபோன்ற மற்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் இப்போதுள்ள அதிகாரங்கள் அவசியம் இருக்கத்தான் வேண்டும். இந்த நாட்டில்

9th August 1965] [திரு. எஸ். கே. சம்பந்தன்]

மக்களாட்சி முறையில் அதிகாரங்கள் பரவலாக இருக்கவேண்டும் என்று ஆளும் கட்சியினரே அடிக்கடி சொல்லி வருகின்றனர். அப்படி இருக்கும்போது, நகரசபைகளுக்கு அதிகாரங்களை அதிக மாகவே கொடுத்து வரவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். நகரசபைகளின் காரியங்களைக் கண்காணிக்கவும், அவைகள் அடிக்கடி செய்யும் தவறுகளைக் கண்டிக்கவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருபகவேண்டியதுதான். ஆனால் அதற்கெல்லாம் இப்போதே அரசாங்கத்திற்கு அதிகாரங்கள் இருக்கின்றன. அப்படி இருக்க, கல்கத்தா நகரசபைச் சட்டத்திலும், டெல்லி நகரசபைச் சட்டத்திலும், நம் ராஜ்ய டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடீஸ் சட்டத்திலும் உள்ள ஒரு அம்சத்தைக் காட்டி, நகரசபை தவறு செய்யும்போது அதை "ஸுபர்ஸீட்" பண்ணுவதற்கு சட்டத்தில் வகைசெய்வது இந்தக் காலத்திற்கு ஏற்றதா, தேவையா என்று எனக்குத் தெரியவில்லை. இது தேவைதான் என்று ஒரு விதத்தில் வாதம் செய்தால் அதை நானும் முழுமனதுடன் ஆதரிப்பேன். ஆனால், இப்போதுள்ள அரசாங்கம் நேர்மையாகவும் நியாய மாகவும் நடக்கிறதா, இந்த அரசாங்கத்திற்கு இந்த அதிகாரங்கள் இருக்கக்கூடாது என்று என் போன்றவர்கள் எண்ண வேண்டி யிருக்கிறது. இந்த அரசாங்கத்திடம் நியாயமும் நேர்மையும் இல்லை என்பதற்கு நூற்றுக்கணக்கான உதாரணங்கள் சொல்ல முடியும். பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாக ஒரு சிறு உதாரணத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சமீபத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபோது, சென்னைக் கார்ப்பரேஷன் உட்பட பல நகரசபைகள் இந்தியை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறை வேற்றின. அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தபோது, அந்தத் தீர்மானங்களை ஏன் ரத்து செய்யக் கூடாது என்று அவைகளை அரசாங்கம் கேட்டது. நான் இதை மிக மிக வரவேற்கிறேன். பஞ்சாயத்துக்கள், நகரசபைகள் முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள் தாங்கள் கவனிக்கவேண்டிய காரியங் களைத்தான் கவனிக்கவேண்டும் என்ற கருத்துக்கு நான் முழு ஆதரவு கொடுக்கிறேன். நான் ஒரு பஞ்சாயத்தின் தலைவன். எங்கள் பஞ்சாயத்தில் இந்த நியதியைக் கூடியவரை கடைப் பிடிக்கிறோம். பல நகரசபைகளில் அரசியல் தலைவர்களுக்கு 'வெல்கம் அட்ரெஸெஸ்' சர்வசாதாரணமாகக் கொடுக்கப்படு கின்றன. சமீபத்தில், ஒரு நகரசபை 'ஆர்ச்' அமைப்பு கட்டக் கூடாது என்று சென்னை உயர்நீதி மன்றம் தடை விதித்திருப்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்த நகரசபையின்மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக் கிறதா ? ஆட்சியிலுள்ளவர்கள் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களின் ஆட்சியில் உள்ள நகரசபைகள் தவறு செய்தால் அதைக் கண்டிப்ப தாகத் தெரியவில்லை. இந்தி பிரச்னை மக்கள் பிரச்னையாக இருக் கிறது. அப்படிப்பட்ட விஷயத்தில் மக்களின் கருத்துப் பிரதி பலிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சென்னை நகரசபை நிறை வேற்றிய தீர்மானத்தை அரசாங்கம் ஏன் அனுமதிக்கக்கூடாது? இந்த மசோதாவில் அரசாங்கத்திற்கு அளிக்கப்படும் அதிகமான

அதிகாரங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படுமோ என்று ஐயுறுகிறேன். எனவே நான் ஆட்சேபிக்கும் ஷரத்துக்களையாவது கைவிடவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

கார்ப்பொரேஷன் கமிஷனர் முதலிய அதிகாரிகளை இப்போது அரசாங்கம் நியமித்துவருகிறது. கமிஷனருக்குக் கீழுள்ள அஸிஸ்டெண்ட் கமிஷனர் உத்தியோகம், இலாகாக்களின் தலைவர்கள் உத்தியோகம் ஆகிய உத்தியோகங்களுக்கு சர்க்கார் கொடுக்கும் பெயர்களிலிருந்து ஆட்களை கார்ப்பொரேஷன் பொறுக்கியெடுத்து நியமிக்கிறது. இந்த சிறு அதிகாரத்தைக் கூட ஏன் கார்ப்பொரேஷனிடமிருந்து அரசாங்கம் பறிக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. ஒருசில நாட்களுக்கு முன் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கூட—சட்டசபை அங்கத்தினர்கள் என்று சொன்னால் கூட மிகையாகாது—என்னிடம் சில குறைபாடுகளைத் தெரிவித்தார்கள். ஒரு எம்.எல்.ஏ.-யின் விருப்பத்திற்கிணங்க ஒரு மாவட்டக் கலெக்டரை மாற்ற அரசாங்கம் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியர்கள் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாற்றப்படுவதற்கு அரசாங்கத்தின் அதிகாரங்கள் பயன்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. இவர்கள் இன்னும் மாற்றப்படவில்லை; இது சம்பந்தமாக ஆர்.டி.ஓ.-வை அங்கத்தினராகக் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, பஞ்சாயத்து யூனியனின் அதிகாரங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அஸிஸ்டெண்ட் கமிஷனர் உத்தியோகம் போன்ற உத்தியோகங்களுக்கு, அரசாங்கம் அனுப்பும் பெயர்களிலிருந்து உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கு கார்ப்பொரேஷனுக்கு இருக்கும் சிறு அதிகாரத்தைக் கூட அரசாங்கம் ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்? எல்லா அதிகாரங்களையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால், நகரசபைகள் இருக்க வேண்டியதில்லை; ஊராட்சி மன்றங்கள் தேவை இல்லை. அதிகாரங்கள் பரவலாக இருக்கவேண்டும் என்று சொல்லும் இந்த அரசாங்கம் ஏன் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இருக்கும் அதிகாரங்களையும் தானே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. இதை அரசாங்கம் முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் மேலை நாடுகளில் இந்த மாதிரி நகரசபைகளுக்கு எந்தவிதமான அதிகாரம் இருக்கிறது என்பதையும் குறிப்பாக சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பல அமெரிக்க நாடுகளில் போலீஸ் வைத்து நடத்துவதற்குக் கூட நகரசபைகளுக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி அதிகாரம் இருப்பதால் நகரசபையில் உள்ளவர்கள் நேர்மையாக நடப்பதால் கனடா நாட்டில் ஒரு மாநிலத்தில் அந்த மாநில அமைச்சரை நகரசபை போலீசார் விசாரித்து அபராதம் விதிக்கும் அளவுக்கு ஆட்சி நடக்கிறது. அப்படிப்பட்ட நகரசபைகள் உள்ள நாடு ஜனநாயக நாடு என்று சொல்வதா, இருக்கிற அதிகாரத்தைப் பறிக்கிற அரசாங்கத்தை ஜனநாயக அரசாங்கம் என்று சொல்வதா

9th August 1965] [திரு. எஸ். கே. சம்பந்தன்]

என்று புரிந்துகொள்ளமுடியவில்லை. நகரசபைகளுக்கு மேலும் மேலும் அதிகமாக அதிகாரத்தைக் கொடுத்து நல்லமுறையில் அவர்கள் அவற்றைப் பயன்படுத்தும்படி செய்து அரசாங்கம் கண் காணிக்க வேண்டுமே தவிர இருக்கக்கூடிய அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, நினைத்தால் கலைத்துவிடுவோம் என்று ஆட்சி செலுத்துவது நகரசபைகளை வாழவிடுவது ஆகாது என்ற கருத்தைச் சொல்லி முக்கியமாக மற்ற சட்டங்கள் இருந்தாலும் அதிகாரங்கள் இருந்தாலும் அசிஸ்டெண்ட் கமிஷனர் போன்றவர் களையாகிலும் நகரசபைகளில் அவர்கள் அமர்த்திக்கொள்ள அவர்களுக்குள்ள அதிகாரத்தை எடுக்கவேண்டாமென்று கூறி இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

(Deputy Chairman in the Chair.)

DR. H. V. HANDE : Mr. Deputy Chairman, at the very outset, I want to emphatically say that this Bill is conceived very unfortunately, and it should not have been brought before this House. The time at which this Bill is brought forward is very inopportune, because up to now, in the State, there is a peculiar complexion in regard to municipal authorities. Some of the opposition members are in charge of the municipal bodies. Let us take for instance the Corporation of Madras. It is in the hands of the opposition members. When this Bill is brought forward at this inopportune moment, there is a feeling creeping among the public and among the opposition members that there is a motive behind this Bill and that this Bill will endanger the very tenets of democracy and the very right of forming an effective opposition. That fear lurks into the public mind. There is a real feeling in the public mind that hereafter it may not be advantageous and it may not be useful to form a healthy opposition. Because, if the Madras Government can take away the fundamental right of running the corporate bodies from the hands of the opposition, tomorrow what will be the consequence? Suppose, the Central Government take away the fundamental rights of the State Government. What would the State Government feel in the matter? Suppose the opposition parties form the State Governments, and the Central Government then say that the rights of the State Governments will be removed and that the State Governments will be superseded, how will the State Governments feel? It is very important that every one of us should realise that this Bill is a very dangerous Bill making in roads into the very fundamental right of the people to form a strong opposition under the democratic system of Government. I beseech this Government and the Chief Minister to withdraw this Bill or at any rate to send it to a select committee to see that certain clauses which seek to supersede the powers of the Mayor are removed. For this purpose, it is imperative that the Government should re-examine the whole Bill and see that some sort of confidence is retored among the public that opposition parties have a right to exist. Otherwise the Government can straightway remove the opposition parties and take up the one party system. This is a very important point which

struck me, as I was going through the Bill. What prevents the opposition from forming a majority in certain municipal bodies and taking charge of the administration of the local bodies by themselves? How, in the name of justice, I ask, all these years, the Government never thought of bringing forward this Bill and how suddenly now they have brought forward this Bill when the opposition parties are gaining strength? Already there is power for the Government to see that proper action is taken if the municipal bodies make mistakes. Even to-day they might do so. Regarding certain points about the allotment of houses, the Government have given instructions to the Commissioner. Even without the present Bill, it was possible for the Government to give instructions to the Commissioner and the Mayor to remove completely a particular resolution that they have passed. Why should they psychologically damage the public confidence in the opposition parties running the corporate bodies, is my question. Therefore, I request the Government and I beseech the Chief Minister to withdraw this Bill or at any rate send it to the select committee. Already the employees in the corporation are discharging their duties well. If the Government think that a certain amount of freshness should be infused among the employees, they can provincialise them and withdraw this particular section which seeks to remove the powers from the Corporation. The Government can give better facilities to the employees; they can transfer them from one department to another or to the State Government and put some State Government employees in the Corporation. That would be all right and will solve the problem also. The question of administration is not the only one thing that has to be taken into consideration. The question of opposition parties coming to power must be taken into consideration. If the opposition parties express a particular view, why should we deny them that right to express their viewpoint?

Sir, I do not want to take any more of the time of the House. The only thing I want to stress is that my point is perfectly possible of adoption. The Government must realise their responsibility in allowing a healthy opposition to come up and in allowing a democratic set up to function in our State. The most essential thing in a democracy is that the opposition party should develop fully. The Government should see that no psychological damage is done to the confidence of the people in running the municipal bodies. The Government should see what will happen if this Bill is passed into an Act.

With these words and with the hope that the Chief Minister will accept the amendment to refer this Bill to a select committee, I resume my seat, Sir.

5-20 p.m.

* திரு. என். வி. நடராசன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத் திருத்த மசோதாவின் மீது கனம் உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை வழி மொழிகின்ற வகையில் எனது கருத்தைக் கூற விரும்புகிறேன். நான் இங்கே சட்டப் பிரச்னைகளை எடுத்துக் கூற விரும்பவில்லை,

9th August 1965] [திரு. என். வி. நடராசன்]

அந்தச் சட்டத் துறையிலும் அதிகமான அனுபவமோ அல்லது சட்டத் துறையில் அதிக ஞானம் பெற்றவன் என்றோ சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. நான் அறிந்தவரையில் சர்க்கார் முன்பு, குறிப்பாக முதலமைச்சர் முன்பு சில கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். மாநகராட்சியின் நடவடிக்கைகளை சர்க்கார் கண்காணிப்பதற்கான பல விதிமுறைகள் சட்டத்தில் இருப்பதாக அறிகின்றேன். குறிப்பாக மாநகராட்சியின் ரிகார்டுகளை எந்த நேரத்திலும் தருவித்து பார்த்து அதிலுள்ள குறைபாடுகளை கவனிப்பதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. உரிமை இருக்கிறது. அது 40-வது விதியின் அடிப்படையில் இருக்கிறது. அதேபோல மாநகராட்சியின் ரிகார்டுகளை நேரடியாக போய் பரிசிலனை செய்வதற்கு சர்க்காருக்கு போதிய அதிகாரம் இப்போது உள்ள நிலையிலேயே இருக்கிறது. அது 41-வது விதியின் அடிப்படையில் இருக்கிறது. அதேபோல சென்னை மாநகராட்சி மன்றம் சர்க்காருக்கு அதிருப்தியாக நடந்தால் அந்த குறிப்பிட்ட பிரச்னையைக் காட்டி அதில் இந்த விதமாகத்தான் நடக்கவேண்டு மென்று அவற்றிற்கு கட்டளையிட சர்க்காருக்கு அதிகாரம் 42-வது விதியின் அடிப்படையில் இருக்கிறது. அது போதாது என்று எந்தக் காரியத்திலாகிலும் கார்ப்பரேஷன் சரியாக நடக்கவில்லை என்றால் பிரத்தியேக அதிகாரியை நியமிக்கவும், இப்படித்தான் செய்யவேண்டுமென்று கட்டளையிடவும், கார்ப்பரேஷன் நிதியிலிருந்து அவருக்கு சம்பளம் தரவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கவும் 43-வது விதியின் அடிப்படையில் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. கார்ப்பரேஷனின் எந்தத் தீர்மானத்தையும் சர்க்காருக்கு 15 நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். அப்படி அனுப்பப்படும் தீர்மானங்களுக்கு 15 நாட்களுக்குள் சர்க்கார் ஒப்புதல் அளித்தால்தான் தீர்மானங்கள் நடைமுறைக்கு வந்ததாகக் கொள்ளமுடியும் என்ற உரிமை 43-வது விதியில் அளிக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் இந்தி எதிர்ப்பு கலவரத்தின் காரணமாக சில நகர மன்றங்கள் நிறைவேற்றிய கண்டனத் தீர்மானங்கள், அனுதாபத் தீர்மானங்கள் ஆகியவைகளை சர்க்கார் ரத்து செய்திருப்பதை கனம் முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாநகராட்சி மன்றம் நிறைவேற்றும் தீர்மானம் இந்த முறையில்தான் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கட்டளையிடும் எல்லா உரிமைகளும் இருக்கும் போது, இந்தத் திருத்தத்திற்கு என்ன அவசியமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக மாநகராட்சியில் இருக்கிறது, எனவே அதைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் ஏதாவது சர்க்காருக்கு இருக்கிறதா என்பது எனக்கு ஐயப்பாடாக இருக்கிறது. இவ்வளவு அதிகாரங்களை வைத்துக்கொண்டு கார்ப்பரேஷனின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்குப் பதிலாக, ஜனநாயகம் வாழ வேண்டுமென்று சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில், மாநகராட்சியை சர்வாதிகாரப் போக்கில் கலைத்துவிடும் நோக்கத்தில் மாநகராட்சி மன்றச் சட்டத்தைக் கொண்டுவருவது, ஜனநாயக வளர்ச்சிக்கும், பண்புக்கும் ஊறு செய்வதாகும்

என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறேன். எனவே இது மிகவும் முக்கிய பிரச்னையாக இருப்பதால், செலக்ட் கமிட்டிக்கு விடுவதன் மூலம், அங்கு நடைபெறும் விவாதத்தை வைத்து சர்க்கார் நல்ல முடிவெடுக்கத் துணையாய் அமையும். இந்தப் பிரச்னையில் சர்க்கார் ஜனநாயக உணர்வோடு நடந்தது என்பதற்கு அடையாளமாக குறைந்த பட்சம் இதை செலக்ட் கமிட்டிக்கு விடுமாறு கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : கனம் தலைவர் அவர்களே, சென்னை நகர முனிசிபல் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் சில வார்த்தைகள் சொல்ல அனுமதி கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி திருத்தங்கள் தேவையா என்று யோசிக்கவேண்டி இருக்கிறது. ஜனநாயகத்தின் அடிப்படையில் "Government for the people. by the people" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அந்தக் குறிக்கோளை வைத்துத்தான் நாம் அரசாங்கம் நடத்துகிறோம் என்று ஓயாமல் சொல்லிக்கொண்டு வருகிறோம். அன்னிய ஆட்சி இருந்த காலத்தில் கூட முக்கியமாக நகராட்சிக்கும் சென்னை மாநிலத்திலுள்ள கார்ப்பரேஷன் போன்ற ஸ்தாபனங்களுக்குமுள்ள அதிகாரத்தைக்கூட எடுக்கவில்லை. அவற்றை அரசாங்கத்தின் கண்காணிப்பில் வைத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் ஏதாவது தவறு செய்தால் அந்த ஸ்தாபனத்தை கலைத்து விட்டு ஸ்பெஷல் ஆபீசர் மூலமாக அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த திருத்தம் வந்திருக்கிறது. கமிஷனர் போன்ற அதிகாரிகளைத்தான் அரசாங்கம் நியமித்து வந்தது. இப்போது அதற்குக் கீழேயுள்ள அதிகாரிகளையும் நியமிக்கவேண்டுமென்று சில திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால் எந்த முனிசிபாலிடியாக இருந்தாலும் கார்ப்பரேஷனாக இருந்தாலும் அவர்களுடைய ஆட்களுக்கு ஆட்சேபனை சொல்லமாட்டார்கள். 'அந்த மாதிரி அதிகாரிகளை அனுப்புகிறோம்; அவர்களால் உங்களுக்கு நிர்வாகம் எளிதாக இருக்கும்' என்று அனுமதி பெற்று அனுப்பினால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். ஜனநாயக ஆட்சி என்று சொல்லிக்கொண்டு மக்களுக்கு இருக்கிற சிறிய உரிமைகளை முனிசிபாலிடி போன்றவைகளின் காரியங்களில் குந்தகம் விளைவிக்கும் அளவில் எதற்காக செய்யவேண்டுமென்று அரசாங்கம் சிந்திக்கவேண்டும். மக்களாட்சி இந்த நாட்டில் நடக்கிறதா, இல்லையா என்று சந்தேகமாக இருக்கிறது. அரசாங்கம் செய்யவேண்டுமென்று நாங்கள் கேட்கும் போது அதிகமாகக் கூட கேட்கவில்லை. இந்தத் திருத்தத்தை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி அங்கே விவாதம் நடத்தி அவசரப்படாமல் காரியங்களைச் செய்யவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறோம். அதற்காவது அரசாங்கம் அனுமதி கொடுத்து மெஜாரிட்டி இருக்கிறது என்ற குறிக்கோளைக் கொள்ளாமல் செலக்ட் கமிட்டி மூலமாக இன்னும் தேவையான திருத்தத்தைக் கூட சேர்த்து செய்யலாம். அப்போது அரசாங்கம் நல்ல காரியம் செய்ய வழிவகை ஏற்படும். மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு அரசாங்கம் இதைச் செய்தார்கள் என்ற பழிச்சொல் ஏற்படாத

9th August 1965] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

வாறு, முக்கியமாக மெட்ராஸ் சிட்டி கார்ப்பரேஷனுக்கு மட்டும் இதை அவசரப்பட்டு செய்யவேண்டியதில்லை. மேல் நாடுகளில் உள்ளதைப்போல முனிசிபல் கார்ப்பரேஷன் போன்ற ஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்க அரசாங்கம் முன்வரவேண்டுமே தவிர இருக்கிற அதிகாரத்தை எடுக்க நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சொல்லி, செலக்ட் கமிட்டிக்கு இதை விட வேண்டுமென்று கூறி இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, நான் மதுரை ஜில்லா போர்டு தலைவனாக இருந்தேன். அப்படியிருந்த போது ஒருமுறை ஜில்லா போர்டு கலைக்கவேண்டுமென்று சட்ட மன்றத்தில் ஒரு தீர்மானம் வந்தது. ஸ்பெஷல் ஆபீசர் அனுப்ப வேண்டியிருந்தது. அப்போது ஜில்லா போர்டு செகரட்டரியாக வி. கே. ராமசாமி முதலியார் இருந்தார். அவர் அப்போது எனக்கு ஒரு கடிதம் எழுதினார். ஜில்லா போர்டு கலைப்பது அநீதி. ராஜாஜியிடம் அதைக் கலைக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு வர வேண்டுமென்று எழுதியிருந்தார். அவருக்கு நான் பதில் எழுதினேன். ஜில்லா போர்டு கலைக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த அரசாங்கத்தை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படி உள்ள அரசாங்கம் செய்தது தவறு என்று குறுக்கே நிற்கவும் கலைக்கவேண்டாமென்று கேட்கவும் தயாராக இல்லை. பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அங்கே வந்து கெஞ்சிக் கொண்டிருக்க முடியாது என்று தெரிவித்துவிட்டேன். ஜில்லா போர்டுகளைக் கலைத்து ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டார்கள். அதற்குப் பிறகு கூட சென்ற காலத்திலே கேரளாவிலே கம்யூனிஸ்ட் சர்க்கார் வந்தது. அந்த சர்க்காரைக்கூட கலைத்துவிட்டு மத்திய சர்க்கார் அதிகாரத்தை மேற்கொண்டது. இப்பொழுதுகூட கேரளாவிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் போதிய மெஜாரிடி இல்லை என்ற காரணத்தால் கவர்னர் ஆட்சி வந்தது. நான் என்ன நினைத்துக்கொண்டிருந்தேன் என்றால் இந்த சட்ட மன்றம் சர்வ வல்லமை வாய்ந்தது; எல்லாவித அதிகாரத்தையும் கொண்டது என்று நினைத்துக்கொண்டிருந்தேன். நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது சட்டமன்ற உறுப்பினராக இருப்பதுதான் மரியாதை, ஜில்லா போர்டு தலைவருக்கு எந்த அதிகாரமும் இல்லை, அப்படி இருப்பது பிரயோஜனமும் இல்லை என்று எண்ணினேன். சட்ட மன்றம்தான் உயர்ந்தது என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இந்த மசோதா வந்ததைப் பார்த்தால் 5, 6 தினங்களாக ஒரு சந்தேகம் வந்தது. இந்த சட்ட மன்றத்துக்கு ஒரு குட்டி கார்ப்பரேஷனைக்கூட கலைக்க அதிகாரம் இல்லாமல் இருந்ததா, அது இப்போதுதான் வரவேண்டுமா என்ற எண்ணம் வந்தது. இந்த கார்ப்பரேஷனைக் கலைக்கும் அதிகாரத்தைப் பெறுவது ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல என்று கூறிக் கொண்டிருப்பது எனக்குப் புரியவில்லை.

5-30 p.m.

இந்தக் கார்ப்பரேஷனில் நடக்கும் சம்பவங்கள் முந்தாநாள் பத்திரிகையிலே பார்த்தேன். மெரீனு கான்டீனேயே சாப்பிட்டு விட்டார்களாம். எல்லோரும் கான்டீனில் சாப்பிடுவார்கள். இவர் கள் கான்டீனேயே சாப்பிட்டுவிட்டார்களாம். இதே மாதிரி குமுதம் பத்திரிகையில் ஒவ்வொரு வாரமும் தவருமல் கார்ப்ப ரேஷன் விஷயம்பற்றி பத்தி பத்தியாக மாறி மாறி எழுதிக்கொண் டிருக்கிருர்கள். இப்படி எழுதிக் கொண்டிருக்கும்போது இந்த கார்ப்பரேஷனைக் கலைக்கும் அதிகாரம் சர்க்காருக்கு இல்லே யென்ருல் இந்த சர்க்கார் எதற்கு இருக்கிறது? இந்த அதிகாரம் மிகவும் அவசியம். கார்ப்பரேஷனிலே இருந்து எந்த அதி காரத்தை எடுத்துவிட்டார்கள். 3 பேர் ஸ்டாண்டிங் கமிட்டி என்று சொல்லி 5 கோடி ரூபாயை பங்குபோட்டுக் கொள்கிருர்கள். அந்த அதிகாரம் அப்படியே இருக்கவேண்டும் என்பதுபோல் இருக்கிறது கனம் சுப்பையா செட்டியார் அவர்கள் சொல்வது.

திரு. எம். சுப்பையா செட்டியார்: நண்பர் அவர்கள் சொன் ஞர்கள். ஐந்து கோடி ரூபாயை பங்குபோட்டுக் கொள்கிருர்கள் என்று. ஐந்து கோடி ரூபாயை பங்கு போடுகிற ஆட்களை இன்று அரசாங்கம் தண்டிக்க பல சட்டங்கள் இருக்கின்றன. அந்த சட்டங்களை மறந்துவிட்டார் என்று நினைக்கிறேன். ஐந்து கோடி ரூபாய் அல்ல, ஒரு பைசாவை திருடியவனைக்கூட பிடிப்பதுதான் அரசாங்கத்தின் முக்கிய வேலை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: on a point of order sir, மூன்று பேர் சேர்ந்து 5 கோடி ரூபாயை பகிர்ந்து எடுத்துக் கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டை சொல்கிருர். அதை எடுத்து வாதடுவதற்கு அவர்கள் இந்த சபையிலே இல்லை. சபையில் இல்லாதவர்கள் மீது குற்றச்சாட்டை சொல்லத் துவங்கலாமா?

டெபுடி சேர்மன்: கனம் அங்கத்தினர் அடுத்தாற்போல் பேசும் போது சொல்லலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன்: 5 கோடி எடுக்கவில்லை என்ருல் ஆளுக்கு ஒரு கோடி என்று சொல்லுங்கள். எனக்கு ஆட்சேப மில்லை. இந்த கார்ப்பரேஷன் நிர்வாகத்திலே இருக்கக்கூடியவர் கள், ஊழல்கள் இல்லாமல் மாறி விடவேண்டும் என்பதற்காகத் தான் இந்த தீர்மானம் வந்ததாக நான் எண்ணுகிறேன். இத்தகைய பயமுறுத்தும் தீர்மானம் ஒன்று ஏதேனும் தவறு செய் தால், 'உங்களைத் தண்டித்துவிடுவோம், கார்ப்பரேஷனேயே கலைத்து விடுவோம்' என்ருல் அங்கே இருப்பவர்கள் ஜாக்கிரதையாக இருப்பார்கள். நாம் கவனிக்காமல் விட்டால், அவர்கள் இஷ்டம்போல் ஆட்டமெல்லாம் ஆடி அந்த கட்சிக்கே கெட்ட பெயரைக் கொண்டு வந்துவிடுவார்கள். அந்த கெட்ட பெயர் வராமல் தடுக்கத்தான் இந்த திருத்த மசோதா வருகிறது. ஆகவே திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு இந்த மசோதாவை அன்பழகன் அவர்கள் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

9th August 1965]

* திரு. கே. எஸ். அப்துல் வகாப்: சட்ட மன்ற உபத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி சட்டத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டு இருப்பதை பூரணமாக எல்லோரும் ஆதரிக்க கூடிய நிலை இல்லை என்பதை நாம் உணர்கின்றோம். அதற்குக் காரணம் இந்த மசோதா கொண்டுவந்த சூழ்நிலை அப்படி உண்மை யிலேயே நல்ல கருத்துடன் கொண்டு வரப்பட்டதோ இல்லையோ, அது கொண்டுவரப்பட்ட சூழ்நிலை அரசாங்கத்தினுடைய 'மோடிவை' (Motive) சந்தேகப்படக்கூடியதாக செய்கிறது. அங்கு ஆட்சி பீடத்திலே வீற்றிருப்பவர்கள் யார் என்பதை வைத்துப் பார்த்தால் இந்த மசோதாவை கொண்டுவரும் கட்டம், சந்தர்ப்பம், இந்த சந்தேகத்தை கிளப்ப அடிப்படையாக அமைகிறது. இன்றைக்கு இந்த நாட்டில் குறிப்பாக நம் மாகாணத்தில் உள்ள முனிசிபாலிடிகளும், பஞ்சாயத்து யூனியன் களும் தங்களுக்கு கூடுதலான அதிகாரம் வேண்டுமென்று கோரிக்கை சொல்லிக்கொண்டே வருகின்றார்கள் பல ஆண்டுகளாக. ஆனால் கொண்டுவரப்படும் இந்த மசோதாவைப் பார்த்தால் அந்த கோரிக்கைக்கு தலைகீழாக அமைந்து இருக்கிறது. உள்ள அதி காரங்கள் கூடுதலாக்க வேண்டுமென்று மக்கள் கோரிக்கையை சமர்ப்பித்த நிலையில் கூடுதலாக கொடுக்க முடியாதது மட்டுமன்றி உள்ள அதிகாரங்கள் அப்படியே வைத்து இருக்கக் கூடிய நிலை மாறி உள்ளதையும் பறிக்கக்கூடிய சட்டம் வந்தால் அது பொது மக்களுடைய வெறுப்பை அதிகமாக அரசாங்கம் சம்பாதித்துக் கொள்வதற்கு வகை செய்யக்கூடியதாகும். இந்த மசோதாவை பிரேரேபித்து பேசிய நமது மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர் கள் சொன்னார்கள். முனிசிபாலிடி ஆக்ட் 41-ஆவது ஷரத்திலே எல்லா முனிசிபாலிடிகளையும் வரம்புமீறி செயல்படும் கட்டங் களிலே கலைத்துவிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அதிகாரம் கார்ப்பரேஷன் சட்டத்துக்கு இல்லாமல் இருந்தது. அதற்கும் கொண்டு வருவதற்குத்தான் இந்த சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன் முனிசிபாலிடி சட்டத்தின் 41-வது ஷரத்தின்படி அளிக்கப்பட் டிருக்கும் அதிகாரம் சரியான முறையில் பிரயோகிக்கப் படுகின்றதா, நியாயமாக நிர்வகிக்கப்படுகின்றதா என்று மக்கள் கேட்கக்கூடிய நிலையை உருவாக்கி இருக்கிறது அரசாங்கம். உதா ரணத்துக்கு சொல்லவேண்டுமென்றால் எல்லா முனிசிபாலிடி களிலும் எல்லா ஆண்டுகளிலும் சாதாரணமாக மதிப்பு வாய்ந்த தலைவர்கள் வந்தால் வரவேற்பு அளிப்பதும் அவர்களுடைய படங் களை திறந்து வைப்பதும் அன்றாட நடவடிக்கையாக இருப்பதை நாம் காண்கின்றோம். திருநெல்வேலி முனிசிபாலிடியிலே சமீபத் திலே அருமை நண்பர் அறிஞர் அண்ணா அவர்களுடைய படத் தையும், நமது இஸ்லாமிய சமுதாயத்தின் தனிப் பெருந்தலைவர் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய படத்தையும் திறந்து வைத்தார்கள் என்ற ஒரே காரணத்துக்காக அந்த முனிசி பாலிடியை ஏன் கலைக்கக்கூடாது என்று அரசாங்கம் கேட்க முன் வந்தது என்றால் இந்த 41-ஆவது ஷரத்தின்படி அளிக்கப்பட்ட

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [9th August 1965

அந்த அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்று சொல்லும் குற்றச்சாட்டு நியாயமான குற்றச்சாட்டாகும். இப்படி மக்கள் அதிருப்தி அடையக்கூடிய வகையில் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய சட்டத்தை வைத்துக்கொண்டு மேலும் அதை விஸ்தரிக்க முற்படுவது வரவேற்கத்தக்கதல்ல, நியாயமானதல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் கார்ப்பரேஷனில் ஆளும் கட்சியாக இருக்கிறது. அதே இடத்தில் இன்றைக்கு காங்கிரஸ் கட்சி கார்ப்பரேஷனில் ஆளும் கட்சியாக இருந்தால் நிச்சயமாக இன்றைக்கு இந்தச் சட்டம் வந்திருக்காது என்று நான் உறுதியாக சொல்வேன். ஒரு பள்ளம் மற்றவர்களைத் தள்ளுவதற்கு வெட்டினால் அந்தப் பள்ளத்தில் வெட்டுபவர்களே சில சமயங்களில் விழுந்துவிடுவார்கள். அந்த நிலையான முடிவு கொடுக்கக்கூடிய மசோதாதான் இந்த சட்ட திருத்த மசோதா என்று குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் அங்கே ஆட்சிபீடத்திலே இருக்கிறது. இன்றைக்கு இந்த மாகாண ஆட்சி பொறுப்பிலே காங்கிரஸ் வீற்றிருக்கிறது. ஒரு காலத்தில் இது தலைகீழாக மாறலாம். கார்ப்பரேஷனிலே காங்கிரஸ் ஆளும் கட்சியாக இருந்து இந்த மாகாண ஆட்சி பீடத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து இந்த மசோதாவை அமுல் படுத்தக்கூடிய கட்டம் வந்தால் அந்த நிலையில் இது எவ்வளவு அக்கிரமமானது, அநீதியானது என்று காங்கிரசைச் சேர்ந்தவர்கள் சொல்வார்கள். இந்த சட்ட திருத்த மசோதா எந்த நோக்கத்துடன் கொண்டுவரப் படுகின்றது என்பதற்கு ஒரு 10 வரிகள் கொண்ட கருத்து ஒரு பத்திரிகையிலே உள்ளதை படித்தால் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். "சென்னை நகர சபை கடந்த பிப்ரவரி மாதம் 18உ ஒரு தீர்மானம்......"

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : படிக்கக்கூடாது. அதிலே இருக்கிறதை சொல்லலாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இந்தி எதிர்ப்பு போராட்டத்தை ஒட்டி சென்னை நகர சபை நிறைவேற்றிய தீர்மானத்துக்காக அரசாங்கம் அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்ததாகவும், அந்த நோட்டீசின் பேரில் மாநகராட்சி மன்றம் மறுபடியும் கூடி சிந்தித்து 30உ தான் முதலில் தீர்மானித்த தீர்மானத்தை மறுபடியும் ஊர்ஜிதம் செய்ததாகவும், அதைத் தொடர்ந்து இந்த அரசாங்கம் அந்த மாநகராட்சி மன்றத்தின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கமிஷனருக்கு உத்தரவு இட்டதாகவும் இந்த செய்தி கூறுகின்றது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இருந்ததாகவும் எனக்கு தெரிகிறது என்று சொல்லவேண்டும்.

9th August 1965]

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இந்த மாதிரி மக்களால் பேசப் படுகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்ன உத்தரவு போடப்பட்டிருக்கிறது ?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சென்னை நகரசபை நிறைவேற்றிய இந்த ஹிந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை ரத்துசெய்ய அரசாங்கம் நகரசபைக்கு உத்தரவு அனுப்பியது. இந்த உத்தரவில், சென்னை நகரசபை இந்த எதிர்ப்புத் தீர்மானத்தை நிறைவேற்றியது ஏன் என்று காரணம் காட்டுமாறு அரசாங்கம் நோட்டீஸ் அனுப்பியது. ஒரு மாதத்திற்குள் நகரசபை பதில் எதுவும் அனுப்பவில்லை. தீர்மானத்தை ரத்து செய்யுமாறு நகரசபைக்கு அரசாங்கம் கூறியது. இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு நகரசபை அதிகாரிக்கும் (கமிஷனருக்கும்) உத்தரவிடப்பட்டுள்ளது.

5-40 p.m.

இந்த அடிப்படையில் பார்த்தால், ஹிந்தியை எதிர்த்து இந்த நகரசபை தீர்மானம் போட்டதால் இந்த நகரசபையினரைப் பழி வாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் எப்போது நினைத்தாலும் இந்த நகரசபையைக் கலைத்துவிடுவதற்கான அதிகாரத்தைத் தான் பெற்றுக்கொள்வதற்கு சட்டத்தில் வகை செய்வதற்கான இந்த மசோதா, ஜனநாயக அடிப்படையை அதிரச் செய்யக் கூடியது. இந்த மசோதாவை சட்டமாக்க வேண்டுமென்று வற்புறுத்துவது நியாயமற்றது. இந்த மசோதாவில் வேறு சில அம்சங்கள் வரவேற்கத்தக்கவையாக இருந்தாலும், மாநகராட்சியைக் கலைப்பது சம்பந்தப்பட்ட ஷரத்தை நீக்க வேண்டும் அல்லது மதிப்பிற்குரிய நண்பர் திரு. அன்பழகன் பிரேரேபித்துள்ள திருத்தத்தின்படி இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்காவது விட வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடிக்கிறேன்.

திரு. எம். எத்திராஜுலு : கனம் உதவித் தலைவர் அவர்களே, இந்த மசோதா ஜனநாயக அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை சர்க்கார் முன்னதாகவே கொண்டு வந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். சென்னை மாநகரத்தில் ஏழை மக்கள் எவ்வளவோ அவதிக்கு ஆளானார்கள். இந்த மசோதா இப்போதாவது வந்ததே என்று மகிழ்ச்சி யடைகிறேன். இந்த மசோதா வருவது குறித்து இன்று சென்னையில் சந்தோஷப்படாதவர்கள் யாரும் இல்லை. இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காக இந்த சர்க்காருக்கு நாம் எல்லோரும் நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். சென்னை நகரசபையில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் அதிகாரத்தில் இருப்பதால் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கருதுவது முற்றிலும்

தவறு. கடந்த காலத்தில் ஒரு ஊரில் இரண்டு ஆட்சிகள் இருந்த போது மக்கள் எவ்வளவு அவதிப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

(Mr. Chairman in the Chair)

ஜனநாயகத்தில் அரசாங்க அலுவலகங்களை அனுசரித்து ஸ்தல ஸ்தாபன அலுவலகங்கள் நடக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, மாநகராட்சியைப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இது கொண்டு வரப்படவில்லை. இது முற்றிலும் நல்ல மசோதா. இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். இத்துடன் என் வார்த்தையை முடிக்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1919-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சென்னை மாநகராட்சிச் சட்டத்தைத் திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திருத்த மசோதாவைப் பொறுக்குக் குழுவின் ஆய்விற்கு விட வேண்டுமென்ற பிரேரணையை வற்புறுத்தி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவானது, 1919-வது ஆண்டிலிருந்து 1965-வது ஆண்டு வரையில்—அதாவது ஏறத்தாழ 45 ஆண்டுகள்—தொடர்ந்து இயங்கிவந்த சட்டம் போதாது என்று கருதப்பட்டு, திடீரென்று ஆளும் கட்சியினரின் ஆர்வத்தால் இங்கே கொண்டுவரப்படுகிறது. இத்தனை ஆண்டுகள் வரையில் மாநகராட்சி இயங்கப் போதுமானதாக இருந்த சட்டம் இப்போது தான் போதுமானதாக இல்லை என்ற முடிவிற்கு மதிப்பிற்குரிய அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால், இப்போது மாநகராட்சி மன்றத்தின் மீது என்னென்ன குற்றங்களைச் சாட்ட ஆளும் கட்சியினர் விரும்புகின்றனரோ அவைகளைவிட அதிகமான குற்றங்கள் சாட்டப்படத்தக்க விதத்தில் இதற்கு முன்பு ஆளும் கட்சி மாநகராட்சியில் அதிகாரத்தில் இருந்தபோது அது நடந்து கொண்டிருந்தது என்று கூற விரும்புகிறேன். இன்று சாட்டப்படும் குற்றங்கள் உண்மையாக நடந்தவையாகக் கருதப்பட்டாலும், அவை முன்பு நடக்காதவை அல்ல என்பதை நான் வாதிட்டு நிலைநாட்ட முடியும்.

நிர்வாகத்திலுள்ள குறைகளைப் போக்க இந்த மசோதா கொண்டு வரப்படுவதாக மதிப்பிற்குரிய அமைச்சர்கள் கூறுகிறார்கள். அப்படியானால், அந்த வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும். என்னென்ன நடவடிக்கைகள் தனிப்பட்ட முறையில் எடுக்கப்பட முடியாமல் கமிஷனர் மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமோ அதற்கான வழிகள் ஆராயப்பட வேண்டும். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சி நிர்வாகத் துறை மாற்றியமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு தான் மத்தியக் குழுவும் வட்டாரக் குழுக்களும் அமைக்கப்பட்டன; பல்வேறு தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். இப்போது மேயரும் மத்தியக் குழுத் தலைவரும் வட்டாரக் குழுக்களின் தலைவரும் பொறுப்பேற்றுத் தான் அந்த அந்த காரியங்கள் செய்யப்படுகின்றன. ஐந்து கோடி, ஆறு கோடி

9th August 1965] [திரு. க. அன்பழகன்]

ரூபாயை மூன்று பேர்கள் பங்கிட்டுக்கொள்கிறார்கள் என்று சொல்வது சரியாகாது. மாநகராட்சி அதற்கு நிச்சயம் இடம் தராது.

சிற்றுண்டி விடுதிகளை ஏறத்தாழ 16 ஆண்டுகளாக வாடகைக்கு விட்டதில் என்ன வாடகைக்கு அவை விடப்பட்டனவோ அதை விடச் சற்று அதிகமான தொகைக்கு வாடகைக்கு விட்டிருந்தால் ரூ. 1,15,000 அதிகமாக வசூலித்திருக்க முடியும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் அங்கே ஊழல் இருக்கிறது என்று சொல்ல முடியாது.

அதிகாரிகள் தவறு செய்தால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு இப்போது போதிய உரிமைகளும் அதிகாரங்களும் இருக்கின்றன. மாநகராட்சி மன்றத்திலுள்ள கமிஷனரும் அங்குள்ள இலாகாக்களின் தலைவர்களான ஹெல்த் ஆபீசர், என்ஜினியர்கள் போன்றவர்களும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட வேண்டும் என்றால், அதை நான் வரவேற்பேன். அவர்கள் அரசாங்க ஆலோசனையுடன் நியமிக்கப்பட வேண்டும் என்றால், அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இந்த ஆட்சி தவறு செய்கிறது என்று ஆளுகிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கருதுகிற காரணத்திற்காக அதைக் கலைக்கிற அதிகாரம் வேண்டுமென்று கேட்பது நிச்சயமாக சொல்வேன் சட்டமன்றத்திலோ அல்லது சட்டசபையிலோ நிறைவேற்றப்பட்டாலும் அதற்கு ஆளும் கட்சி செல்வாக்கு வலிவு காரணமே தவிர நீதி காரணமாகாது. கலைக்க வேண்டுமென்று சொல்லும்போது அதிலிருக்கிற உள் நோக்கத்தை எதிர்க்கட்சியினர் எடுத்துக் காட்டினார்கள். இந்த மசோதாவில் என்ன நோக்கம் வற்புறுத்தப்படுகிறதோ அது முன்பே சொல்லப்பட்டுவிட்டது. 1963-ல் நடைபெற்ற மாநகராட்சி தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான வெற்றி பெற்றவுடன் அதைக் கண்டிக்கும் வகையில் காங்கிரஸ் பேச்சாளர்களும் தலைவர்களும் மேடையிலே பேசியதைக் கேட்டோம். இவர்கள் எத்தனை நாளைக்கு கார்ப்பரேஷனிலே இருக்கமுடியும்? அப்படி இருக்கவிடுவோமா, கலைத்துக் காட்டுவோம், என்று மேடையில் சொன்னார்கள். இன்று கலைக்கச் சட்டம் கொண்டுவந்துவிட்டார்கள். காங்கிரஸ் பேச்சாளருக்கு அரசாங்கம் பெற்றிருக்கிற உரிமையில் அத்தனை துணிவு எப்படி ஏற்பட்டது? பெரும்பாலான வலிவு உங்களுக்கு இருப்பதால் எதையும் சட்டமாக நிறைவேற்றிக் கொள்ள முடிகிறது. அதைத் தடுக்க என்ன வழி எங்களிடத்தில் இருக்கிறது? வேண்டுமானால் வாதிட முடியுமே தவிர வேறு என்ன செய்யமுடியும்? நீதி எப்படி அங்கே கிடைக்கும்? திரு. அப்துல் வகாப் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், திருநெல்வேலி நகரசபையில் மற்றொரு தலைவரின் படம் திறந்துவைக்கப்பட்டதன் காரணமாக எத்தனை அபிப்ராயம் பரிமாறப்பட்டது. அந்த நகராட்சி மக்கள் கண்காட்சி நடத்துவதற்கு எவ்வளவு குறுக்கீடுகள் இருந்தன? எவ்வளவு இடையூறுகள் செய்தார்கள் ஆளும் கட்சியினர்? படம் திறந்ததற்கு நகராட்சிப் பணம் செல

5-50 p.m.

[திரு. க. அன்பழகன்] [9th August 1965

